**தலைப்பு – 102 - நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொ டர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் |
| 240 | தேசிய வரவு, செலவுத் திட்டத் திணைக்களம் |
| 241 | அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| 243 | அபிவிருத்தி நிதி திணைக்களம் |
| 244 | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் |
| 245 | அரச நிதித் திணைக்களம் |
| 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் |
| 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் |
| 280 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் |
| 296 | இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் |
| 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் |
| 324 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் |
| 329 | தகவல் தொழில்நுட்ப முகாமைத் திணைக்களம் |
| - | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிதி, திட்டமிடல் அமைச்சினதும் திணைக்களங்களினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 102 | நிதி, திட்டமிடல் அமைச்சு | 2015 ஒக்தோபர் 06 |
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 25 |
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 28 |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 31 |
| 240 | தேசிய வரவு, செலவுத் திட்டத் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 25 |
| 241 | அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 01 |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 10 |

| | | |
|---|---|---|
| 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 01 |
| 244 | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 25 |
| 245 | அரச நிதித் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 12 |
| 249 | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 23 |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 03 |
| 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் | 2015 யூலை 03 |
| 280 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 01 |
| 296 | இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 01 |
| 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 31 |
| 324 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 13 |
| 329 | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் | 2015 யூலை 22 |
| - | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் | 2015 யூலை 14 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள 17 திணைக்களங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,149,577 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 1,121,121 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 0.15 மில்லியன் முதல் ரூபா 25,676.37 மில்லியன் வரையிலான வீச்சில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 0.03 சதவீதத்திலிருந்து 30.05 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 102 | 5,704.30 | 4,495.23 | 1,209.07 | 21.20 |
| 237 | 173.36 | 145.67 | 27.69 | 15.97 |
| 238 | 75.89 | 75.74 | 0.15 | 0.20 |
| 239 | 1,537.15 | 1,075.19 | 461.96 | 30.05 |
| 240 | 2,987.10 | 2,613.13 | 373.97 | 12.52 |
| 241 | 11,407.92 | 11,404.02 | 3.90 | 0.03 |
| 242 | 38.82 | 35.28 | 3.54 | 9.12 |
| 243 | 7,964.05 | 7,304.49 | 659.56 | 8.28 |
| 244 | 761.94 | 741.35 | 20.59 | 2.70 |
| 245 | 190.55 | 190.28 | 0.27 | 0.14 |
| 249 | 1,117,378.81 | 1,091,702.44 | 25,676.37 | 2.30 |
| 250 | 33.34 | 32.03 | 1.31 | 3.93 |
| 251 | 1,041.35 | 1,035.07 | 6.28 | 0.60 |
| 280 | 74.05 | 71.44 | 2.61 | 3.52 |
| 296 | 54.83 | 54.41 | 0.42 | 0.77 |
| 323 | 18.18 | 17.45 | 0.73 | 4.02 |
| 324 | 27.90 | 25.97 | 1.93 | 6.92 |
| 329 | 107.57 | 101.94 | 5.63 | 5.23 |
| மொத்தம் | 1,149,577.11 | 1,121,121.13 | 28,455.98 | 2.48 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களினால் 2014 ஆம் ஆண்டிற்கான 58 வருமானக் குறியீடுகளுக்காக ஆரம்ப மதிப்பீடாக ரூபா 1,433,252 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் ரூபா 1,320,360 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 1,115,937 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. திருத்திய மதிப்பீட்டு வருமானத்தில் 19 சதவீதத்திற்கும் 5,868 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு - | உள்ளவாறான வருமானம் | (குறைவாக)/ அதிகமாக சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | |
| அரசிறைக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் | 10.02.10.00 | 40 | 86.06 | 46.06 | 215 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 10.02.11.00 | 32,000 | 31,351.49 | (648.51) | 98 |
| தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம் | 20.01.03.00 | 145 | 158.33 | 13.33 | 109 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.02.01.01 | 650 | 641.73 | (8.27) | 99 |
| -மேற்படி- | 20.02.01.99 | 3,120 | 3,509.95 | 389.95 | 112 |
| -மேற்படி- | 20.02.02.01 | 8,425 | 6,757.89 | (1,667.11) | 80 |
| -மேற்படி- | 20.02.02.99 | 1,475 | 1,220.17 | (254.83) | 83 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | 20.02.03.00 | 38,440 | 42,136.52 | 3,696.52 | 110 |
| -மேற்படி- | 20.02.04.00 | 4,960 | 4,677.09 | (282.91) | 94 |
| திறைசேரிச் செயற்பாடுகள் | 20.03.01.00 | 100 | 98.75 | (1.25) | 99 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| பிரதான மதிப்பீட்டாளர் | 20.03.02.09 | 70 | 110.03 | 40.03 | 157 |
| திறைசேரிச் | 20.03.02.99 | 8,000 | 2,851.66 | (5,148.34) | 36 |
| செயற்பாடுகள் | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| திறைசேரிச் | 20.03.03.00 | 3,000 | 2,735.87 | (264.13) | 91 |
| செயற்பாடுகள் | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| -மேற்படி- | 20.03.99.00 | 12,000 | 4,705.35 | (7,294.65) | 39 |
| அரசிறைக் கொள்கைப் | 20.05.01.00 | 23,000 | 11,500.00 | (11,500.00) | 50 |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| திறைசேரிச் | 20.05.99.00 | 2,200 | 1,867.98 | (332.02) | 85 |
| செயற்பாடுகள் | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| திறைசேரிச் | 20.06.02.00 | 300 | 17,604.34 | 17,304.34 | 5,868 |
| செயற்பாடுகள் | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| திறைசேரிச் | 20.06.04.00 | 14,750 | 14,892.39 | 142.39 | 101 |
| செயற்பாடுகள் | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| -மேற்படி- | 30.01.01.00 | 32,000 | 9,415.03 | (22,584.97) | 29 |
| தேசிய வரவு | 20.03.04.00 | 2,500 | 5,737.58 | 3,237.58 | 230 |
| செலவுத்திட்ட | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | | | | | |
| மொத்தம் | | 187,175 | 162,058.21 | (25,116.79) | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 18 திணைக்களங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| ------- | ---------------- | | ----------------- | | ------------------ | |
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | -------- | -------- | -------- | -------- | --------- | --------- |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10201 | 12.0 | 10.42 | 8.5 | 8.69 | 70 | 45.76 |
| 23701 | 4.6 | 3.96 | 2.5 | 3.02 | 25 | 15.79 |
| 23801 | 2.5 | 2.49 | 1 | 1.57 | 10 | 7.68 |
| 23901 | 4.5 | 4.49 | 2.5 | 3.18 | 30 | 16.06 |
| 24001 | 5.5 | 3.56 | 3.5 | 3.94 | 28 | 18.56 |
| 24101 | 4.0 | 2.81 | 1.6 | 2.58 | 19 | 12.46 |
| 24201 | 3.0 | 2.7 | 1.7 | 1.75 | 15 | 11.75 |
| 24301 | 2.5 | 1.22 | 0.4 | 0.94 | 9 | 5.83 |
| 24401 | 2.5 | 1.32 | 1.3 | 1.51 | 12 | 8.03 |
| 24501 | 3.0 | 2.12 | 1.2 | 1.65 | 16 | 7.95 |
| 24901 | 4.0 | 3.95 | 2.5 | 3.81 | 21 | 16.46 |
| 25001 | 3.5 | 1.46 | 1.2 | 1.32 | 15 | 6.54 |
| 25101 | 17.0 | 16.94 | 12 | 14.17 | 70 | 63.22 |
| 28001 | 5.0 | 3.42 | 2.2 | 2.44 | 20 | 11.37 |
| 29601 | 4.0 | 3.35 | 2 | 2.37 | 20 | 14.38 |
| 32301 | 1.0 | 0.4 | 0.2 | 0.28 | 3 | 1.41 |
| 32401 | 3.0 | 1.91 | 1.25 | 1.67 | 10 | 7.26 |
| 32901 | 1.0 | 0.99 | 0.2 | 0.58 | 6 | 3.05 |

### 2.3.2 வணிகரீதியற்ற முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களினால் வணிகரீதியற்ற இரண்டு முற்பணக் கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25002 | 4.00 | 3.49 | 3.50 | 3.55 | 3.50 | 0.11 |
| 25003 | 10.00 | 111.30 | 2.50 | 115.76 | 513.00 | 342.64 |

### 2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள பாதீட்டுத் திணைக்களத்தினது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 0.8 மில்லியன் ஆகும்.

### 2.5 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 07 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20.72 மில்லியன் ஆகும். விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | 6000/0000/00/0015/0016/000 | 20.42 |
| அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 6000/00000/00/0015/0118/000 | 0.04 |

| | | |
|---|---|---|
| வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0124/000 | 0.02 |
| திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0129/000 | 0.01 |
| அரசாங்க கணக்குகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0130/000 | 0.13 |
| மதிப்பீட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0131/000 | 0.08 |
| இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0151/000 | 0.01 |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0122/000 | 0.01 |
| | | -------- |
| மொத்தம் | | **20.72** |
| | | ===== |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 17 திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வணிகரீதியற்ற முற்பணக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 20 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 102 – நிதி, திட்டமிடல் அமைச்சு

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.1.1 பாதீட்டு முரண்கள்

08 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 19 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 843,900 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அக் கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.3 இணங்காமை

2008 யூன் 26 ஆந் திகதிய 13/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வீட்டிற்கும் அலுவலகத்திற்குமிடையே குழுப் போக்குவரத்து வசதிகள் வழங்கக்கூடிய ஆகக் கூடிய தூர அளவு 50 கிலோ மீற்றராக இருந்த போதிலும், நாளாந்த ஓட்ட அட்டவணைகளைப் பரிசோதித்தபோது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் அத் தூர அளவினை விஞ்சி 70 உத்தியோகத்தர்களுக்குக் குறித்த வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

**3.4 செயலாற்றல்**

--------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியின் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ரூபா 80,176,033 கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் 2014 ஏப்ரல் மற்றும் மாதம் மே மாதங்களில் நிறைவேற்றி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த வேலை 2015 பெப்ரவரி மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பாதீட்டின் மூலம் ரூபா 1,275,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டு புதிய திறைசேரிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான பொறியியல் மதிப்பீடு ரூபா 1,157,040,095 ஆக இருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகளுக்கு ரூபா 1,317,312,223 தனியார் கம்பனியொன்றிற்கும் மதியுரைச் சேவையினை வழங்குவதற்கு ரூபா 65,865,611 அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றிற்குக் கையளிக்கப்பட்டிருந்தன. ஆயினும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பௌதிக நிர்மாண நடவடிக்கைகளில் 60 சதவீதத்திற்குக் குறைந்த அளவு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை**

------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013/2014 ஆம் ஆண்டிற்காக நிலத்தை அலங்கரிக்கும் செய்யும் நடவடிக்கைகளுக்காக நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாகப் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் உரித்தாகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் விலை வித்தியாசங்களை ஒப்பிடு செய்யும் போது தேசிய போட்டியாளர் கேள்வி தொடர்பான கொள்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013/2014 ஆம் ஆண்டிற்கான நிலத்தின் அலங்கரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்ட நிறுவனம், நிதி அமைச்சினால் கேள்வி கோரப்பட்ட 09 நிறுவனங்களில் உள்ளடங்கியிருக்கவில்லை. அந்த நிறுவனங்களினால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட முறை வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் தவறினால் அந்த கேள்விதாரரின் பெயரை உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.3(அ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி திறத்தல் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்கூறப்பட்ட கொள்வனவிற்காக அவ்வாறு நியமிக்கப்படாதிருந்ததுடன் 6.3.6 வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி திறத்தல் தொடர்பான அறிக்கை குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்தில் கேள்வி திறத்தல் குழுவின் சகல அங்கத்தவர்களினாலும் கையொப்பம் இடப்படவேண்டிய போதிலும் எந்தவொரு உத்தியோகத்தரும் அந்த மாதிரிப்படிவத்தில் கையொப்பமிட்டிராததுடன் தவறு காரணமாக3 உத்தியோகத்தர்கள் கையொப்பமிடாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.7.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் கிடைக்கப்பெற்ற கேள்விகளுக்கிடையே விருப்பம் தெரிவித்துள்ள ஆகக் குறைந்த விலையுடனான கேள்வி திர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட கொள்வனவிற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த இரண்டு நிறுவனங்களின் கேள்விகளை நிராகரித்து ஆகக் குறைந்த விலையினை விட 77 சதவீதம் அதிகரித்த பெறுமதியான ரூபா 7,406,000 ஐச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.1.1(அ) வழிகாட்டியின் பிரகாரம், தொழில்நுட்ப மாதிரித் திட்டங்கள் போன்றவை தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தொழில்நுட்ப மாதிரித் திட்டங்களை

உள்ளடக்கிய கேள்வி கோரல், பதிவேடு கொள்வனவு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி அல்லது (விலை தளம்பல்) கோரல் அழைப்பிற்கு சாதகமாக நடப்பதற்காக, செய்வதற்குள்ள பொருட்கள், சேவை அல்லது வேலைகளுக்காக கேள்விகளை தயார்படுத்துவதற்கு கேள்விதாரர்களுக்குத் தேவையான சகல தகவல்களும் கேள்வி கோரல் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், மேற்கூறப்பட்ட கொள்வனவின் கேள்வி கோரல் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி திறத்தல் தொடர்பான செயற்பாடுகள் குறித்த மாதிரிப்படிவத்தில் அறிக்கையிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்த அறிக்கைக் குறிப்புகள் கேள்வி திறத்தல் குழுவின் சகல அங்கத்தவர்களினாலும் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. 6.3.7 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆரம்பக் கேள்விப் பதிவேடு மற்றும் கேள்வி திறத்தலுக்குரிய அறிக்கைக் குறிப்புகள் என்பன தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவருக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டிற்காக மதியுரையாளரின் சேவை பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மதியுரையாளரின் சேவை பெறப்படாதிருந்ததுடன் அவ்வாறு மதியுரையாளரின் சேவை பெறப்பட்டிருக்குமாயின் அதனை விடக் குறைந்த விலையில் இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.9.10 ஆம் வழிகாட்டியின் படி கேள்விகள் ஒப்பிடப்பட்டு ஆகக் குறைந்த விலையுடன் நியாயமான விருப்பத்தினைக் காண்பிக்கப்படுகின்ற கேள்விதாரர்கள் தீமானிக்கப்பட வேண்டிய போதிலும், சுத்திகரிப்புச் சேவையினை மேற்கொள்வதற்காக நிறுவனமொன்றைத் தெரிவு செய்யும் போது அமைச்சின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் கம்பனியொன்றின் சேவை கைவிடப்பட்டு மேலுமொரு கம்பனிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையினால், 2013/2014

ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்புச் சேவைக்கு ரூபா 806,400 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

2013 மார்ச் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2014 ஏப்ரல் 27 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 7,406,000 கிரயமான பொதுத் திறைசேரி வளவை அலங்கரிக்கப்பதற்கான மரங்களை நடுதல் மற்றும் தரையினை செப்பனிடல் ஒப்பந்தத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கையின்படி ரூபா 1,440,000 மிகவும் அரிதான 125 மர வகைகளை நாடுவதற்கு ஒப்பந்தகாரருடன் இசைவு ஏற்பட்டபோதும், சுலபமாக வளரும் ஆற்று மீன், மகுல் கரந்த, பாலை, மில்ல மற்றும் மதுர போன்ற மர வகைகள் நடப்பட்டிருந்தன.

(ஆ) மிகவும் பாரியளவில் வளரக்கூடிய இந்த மர வகைகள் கட்டிடத்தின் குறிப்பிடத்தக்க தூரத்தில் நடப்பட வேண்டிய போதிலும், கட்டிடத்திலிருந்து 3 அடி அளவிலான தூரத்தில் நடப்பட்டமையால் இந்த மரங்கள் பெரிய அளவில் வளரும்போது அவற்றினால் கட்டிடத்திற்கு சேதம் ஏற்படும் ஆபத்து காணப்பட்டது.

(இ) இந்த ஒப்பந்தத்தின் மூலம் சதுர அடியொன்று ரூபா 150 வீதம் 11,600 சதுர அடியில் புல்பதித்தலுக்காக 2014 மே 13 ஆந் திகதி ரூபா 1,740,000 செலவிடப்பட்டிருந்ததுடன் 2015 யூலை 08 ஆந் திகதி வாகனத் தரிப்பிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பொதுத் திறைசேரி வளவின் பின்புறமாக அமைந்துள்ள 7,300 சதுர அடியிலுள்ள புற்தரையைத் திறைசேரி வளவிலிருந்து அகற்றுவதற்காக ரூபா 766,350 செலவிடப்பட்டிருந்தது.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

----------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 31 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 117 | 89 | 28 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 108 | 94 | 14 | - |
| (v) | ஏனையவை (அமைய) | - | 15 | - | 15 |
| | மொத்தம் | 266 | 233 | 48 | 15 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014 ஏப்ரல் 22 ஆந் திகதிய டீஎம்எஸ்/சீ2/2/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைகளில் 20 மற்றும் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதிய டீஎம்எஸ்/சீ2/2/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் மேலும் 11 பதவிகளும் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் மிகையான பதவியணியினர் 15 ஆக இருந்தது.

## 4. தலைப்பு – 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்

---

### 4.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**பாதீட்டு முரண்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேந்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 21,880,000 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆறு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 4.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்தவைகள் மற்றும் 05 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 213,887 ஆக இருந்ததுடன், அந்தக் கடன் மீதியில் மரணமடைந்த ஊழியரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 34,847 தொகையும், வேலை நீக்கஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 34,525 தொகையும், சேவை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 144,515 தொகையும் ஆக மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

### 4.3 செயலாற்றல்

---

திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காகக் கோரப்பட்ட போதிலும், 2015 ஜுன் 30 ஆந் திகதியளவிலும் அத் தகவல்கள் கிடைக்காமையினால் செயலாற்றல் தொடர்பாக பரீட்சிப்பதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது.

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 44 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 28 | 17 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 27 | 02 |
| | மொத்தம் | 116 | 89 | 27 |

**5. தலைப்பு 238 – அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

**5.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. பதவியணியினரால் பயிற்றுவிப்பதற்கு ரூபா 400,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 292,030 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 107,970 அதாவது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 27 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

ii. நிதிப் பிரமாணம் 94(i) மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6.4 ஆம் பந்தியின் பிரகாரம், பொறுப்புகளை ஏற்படுத்துவதற்கு முன்னர் அதற்காக உரிய செலவின விடயங்களில் போதியளவான நிதி ஏற்பாடு உள்ளதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அவ்வாறான உறுதிப்படுத்தலின்றி ரூபா 409,741 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**5.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 23,040 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 11,586 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை முறையே மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 50 சதவீதம் மற்றும் 215 சதவீதமாக இருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10.02.10.00 ஆம் வருமானக் குறியீடு - சமூகப் பொறுப்பு வரி

மீளாய்வாண்டின் வருமானக் கணக்கின் பிரகாரமும் இலங்கை சுங்கத்தால் 2015 பெப்ரவரி 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரமும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை வருமானம் (மொத்தப் பெறுமதி) ரூபா 82,306,007 ஆகும். 2011 ஆம் பாதீட்டு முன்மொழிவுகளின் பிரகாரம் இந்த வரி அறவிடல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானங்களை அறவிடும் செயற்பாடுகளுக்காக திருப்பதிகரமானதும் முறையானதுமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இந்த நிலுவை வருமானம் அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிடப்படவுள்ளமையால் எதிர்கால பாதீட்டு நிதி ஏற்பாடுகளிலிருந்து உரிய நிலுவைப் பணம் அறவிடக்கூடியதாக இருக்கும் என சுங்கத் திணைக்களத்தால் 2012, 2013 மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20.05.01.00 ஆம் வருமானக் குறியீடு - மத்திய வங்கி இலாபம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்த நிலுவைப் பணம் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான

அறிக்கைகளுக்கிடையே ரூபா 300,000 வேறுபாடு காணப்பட்டது. அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியளவில் வருமானக் கணக்குகளின் மொத்த தேறிய நிலுவைத் தொகை ரூபா 300,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் ரூபா 21,591,991,000 தேறிய இலாபம் பெறப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியின் பதிற் பிரதான கணக்காளரின் இலக்கமற்ற 2015 மார்ச் 23 ஆந் திகதிய கடிதத்தின்படி ரூபா 8.500,000,000 திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்கின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 11,500,000,000 ஆனமையால் மேற்கூறப்பட்ட பெறுமதிகள் ஒன்றுடனொன்று இணங்கவில்லை.

## 5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், சகல திணைக்களங்களினாலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், உரிய அறிக்கை ஏறக்குறைய 5 மாத தாமதத்தின் பின்னர் 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.4 செயலாற்றல்

---

2014 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க வருமானம் தொடர்பான இலக்கினை சிறப்பாக அடைவதற்கு வருமானம் சேகரிகப்படுகின்ற நிறுவனங்களது வருமானச் செயற்பாடானது வருடம் முழுவதும் மேற்பார்வை செய்யப்படுதல், அது தொடர்பான தரவு முறையொன்றை நாளதுவரையாக்குதல் மற்றும் அதற்குத் தேவையான ஆலோசனைகள் உரிய நிறுவனங்களுக்கு வழங்குதலின் மூலம் நிரந்தர தொடர்பை பேணுவதற்கு திணைக்களம் செயற்பட வேண்டியிருந்தது. 2014

ஆம் ஆண்டில் வரி வருமானம் மற்றும் வரியல்லா ஆரம்ப வருமான மதிப்பீடு, திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் மூலம் 5 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையான குறைவும், ஒரு வருமானக் குறியீட்டின் வருமானம் 6 சதவீத அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. திருத்திய வருமான மதிப்பீட்டிற்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்குமிடையே 5 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான குறைவும், மேலும் ஒரு வருமானக் குறியீட்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 8 சதவீத அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 வருமானக் குறியீடுகளில் சேகரிக்கப்பட்ட வருமானம் 3 சதவீதம் முதல் 56 சதவீதம் வரை குறைவடைந்திருந்தன.

(ii) காலாண்டிற்கு ஆகக் குறைந்தது ஒரு கூட்டம் வீதம் ஆண்டு முழுவதும் உரிய தரப்பினருடன் அரசிறைக் கொள்கை மீளாய்வுக் கூட்டம் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உரிய கூட்டம் நடாத்திய திகதி, கூட்டத்தின் போது மீளாய்வு செய்யப்பட்ட விடயங்கள், துறைகளில் அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானம், அதன் பிரகாரம் திருத்தங்களைச் செய்தல் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் விநியோகித்தல் தொடர்பான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கைகளிலும் தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014 ஆம் ஆண்டு முழுவதும் சுனாமி மீள் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான பெறுமதிசேர் வரி வசதிகளை பிற்போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பெறப்பட்ட செயல்முன்னேற்றத்திற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் அண்டிற்கான திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையிலும் அது தொடர்பான தகவல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 14 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 25 | 18 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 12 | 03 |
| | மொத்தம் | 65 | 46 | 19 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

‘‘அரசாங்கத்தின் விரிவான அபிவிருத்திக் கட்டமைப்பினுள் அரசிறைக் கொள்கை வழங்கல் மற்றும் அமுல்படுத்துதல்’’ திணைக்களத்தின் செயற்பணியாக இருந்ததுடன் அது தொடர்பான வருமானம் மற்றும் செலவின மதிப்பீட்டை மீளாய்வு செய்தல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் மற்றும் அதற்குத் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்குத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட பொருளியல் நிபுணர், பொருளியல் நிபுணர் மற்றும் புள்ளி விபரவியலாளர் பதவிகள் சில வருட காலமாக தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 6. தலைப்பு 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### 6.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

ஆறு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 18 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 6.2 செயலாற்றல்

2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் செயலாற்றல் அறிக்கையினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 02 நோக்கங்களின் கீழ் சீன அரசாங்கத்தின் மூலம் 10 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுசரணையைப் பெற்றுக் கொள்வது நோக்கமாக இருந்த போதிலும், 06 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாத்திரமே அனுசரணை கிடைத்திருந்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிப் பிரிவின் மூலம் 07 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுசரணை பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 05 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாத்திரமே அனுசரணை கிடைத்திருந்தது.

### 6.3 மனிதவள முகாமைத்துவம்

#### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 40 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 64 | 39 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 23 | 06 |
| | மொத்தம் | 150 | 104 | 46 |

## 7. தலைப்பு 240 - தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

### 7.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு செலவின விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடாகிய ரூபா 20,000 சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 16 சதவீதத்திற்கும் 33 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்படாத 4 செலவின விடயங்களுக்கு ரூபா 1,022,854,600 நிதி ஏற்பாடு நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் பெறப்பட்டிருந்தது.

### 7.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 2,645 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 5,896 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம்

சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடு செய்யப்பட்ட வருமானத்தில் முறையே 109 சதவீதம் மற்றும் 230 சதவீதமாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 20.01.03.00 ஆம் வருமானக் குறியீடு - முற்பணக் கணக்கு (வர்த்தகம்)

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 258,000,000 முதல் ரூபா 145,000,000 வரை திருத்தஞசெய்யப்பட்டமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 85(2)(அ) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை கடற்படையின் முற்பணக் கணக்கு நடவடிக்கையில் உழைக்கப்பட்ட தேறிய வருமானத்தில் செலவு வைக்கப்படாத முறையே ரூபா 1,051,778 மற்றும் ரூபா 30,746,826 என்பன தொடர்பாக நிலுவை வருமானமாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20.03.04.00 ஆம் வருமானக் குறியீடு - அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பான ஆரம்பக் கொடுப்பனவு

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு அமைச்சு, திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகம் ஊடாக வழங்கப்பட்ட பெண் மற்றும் ஆண் மோட்டார் சைக்கிள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தால் பேணப்படாதிருந்ததுடன், அந்த நிறுவனத்தால் இந்த வருமானக் குறியீட்டில் செலவு வைக்கப்பட்ட வருமானத்தின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான திட்டமொன்று காணப்படவில்லை.

(ii) அமைச்சு, திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இந்த வருமானக் குறியீட்டிற்குரித்தற்ற ரூபா 821,124 தொகையான வருமானம் இந்த வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) சேவையிலிருந்து விலகிச் செல்லும் போது இரண்டு பெண் மோட்டர் சைக்கிள்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 364,980 தொகை இந்த வருமானக் குறியீட்டில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த தொகை அதிகரித்து செலவு வைக்க்பபட்ட வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 821,124 தொகையில் உள்ளடங்கியிருந்தது. இந்த வருமானம் எந்த வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட வேண்டியது எனக் கண்டறிந்து அது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு ஆலோசனை 2015 யூலை 06 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மோட்டார் சைக்கிள்களுக்காக உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட பணம் இந்த வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் சில உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(v) திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் வருமான சேகரிப்பிற்கும் இடையிலான முரண்களின் காரணமாக, 2015 ஆம் ஆண்டிற்குரிய மோட்டார் சைக்கிள்களுக்கான ஆரம்பக் கொடுப்பனவு 2014 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டதாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. திணைக்களம் இந்த வருமானக் குறியீட்டிற்குரிய வருமானப் பெறுவனவுகள் தொடர்பான ஏடுகளை நாளது வரையாக்கியிருக்கவில்லை. அவ்வாறே, ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானத்திற்குரிய தகவல்கள் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டமையினால் இந்த வருமானக் குறியீட்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் சரியான தன்மையினைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

**7.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 463,101 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 5 வருடம் முதல் 14 வருடங்கள் வரையிலானவையாயினும் அந்த நிலுவைக் கடன் மீதிகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 7.4 கட்டு நிதிக் கணக்குகள்

-------------------------------------

திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதி ரூபா 83,325 ஆக இருந்ததுடன், அதில் 2008 ஆம் ஆண்டின்போது உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 83,325 தொகையான வெளிநாட்டு பிரயாண முற்பணம் உள்ளடங்கியிருந்ததுடன் அத்தொகையை இது வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்

-----------------------------------------------

திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஓராண்டிற்குக் குறைந்த காலமாக கொண்டுவரப்படும் தீர்க்கப்படாத பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 444,668,000 ஆக இருந்தது. அந்த பொறுப்புகளில் ரூபா 316,834,000 குத்தகை வாகனத்திற்கான தவணைப் பணமாக இருந்ததுடன், ரூபா 127,443,000 குத்தகை வாகனத்திற்கான வட்டிப் பெறுமதியாகும்.

## 7.6 செயலாற்றல்

------------------------

2014 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செலவினங்களை மேற்கொள்கின்ற பணிகளது வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக நிதியைச் செலவிட்ட முகவர் நிறுவனத்துடன் கலந்துரையாடுதல் மற்றும் நிதியைப் போன்றே பௌதீக செயல்முன்னேற்றத்தையும் மேற்பார்வை செய்வதற்காக செலவினப் பகுப்பாய்வு செய்தல் என்பன திணைக்களத்தின் கடமையாகும். வருடாந்த மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமை அல்லது காணப்படுகின்ற நிதி ஏற்பாடு உரிய செயற்பாடுகளுக்குப் போதியளவில் இல்லாதிருக்கும் போது பாதீட்டு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைப் பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 2,751,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 165,316 தொகை ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மற்றும் பொருளாதார ரீதியில் பயனற்ற வாகனங்களை கைதவிர்த்தல் மற்றும் வாடகை வாகனங்களை தவிர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கில் 2010 ஆகஸ்ட் 30 ஆந் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவைக் குறிப்பு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2011 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 2,883 வாகனங்கள் குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கைதவிர்க்கப்பட்ட பழைய வாகனங்கள் மற்றும் வாடகை அடிப்படையின் கீழ் பெறப்பட்ட வாகனங்களில் அகற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 145 மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம், காணப்பட்ட வாகன எண்ணிக்கையில் கைதவிர்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை குறைவினை விஞ்சி குத்தகை முறையின் கீழ் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தவணைப் பணம் மற்றும் வட்டியாக ரூபா 4,247,750,569 கூட்டுமொத்தம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 10,062,599,627 கூட்டுத்தொகையான கடன் செலுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இதன் கீழ் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை 28 ஆந் திகதியளவிலும் உரிய அரசாங்க நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படாது வாகனத் தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கை 541 ஆகும்.

## 7.7 மனிதவள முகாமைத்துவம்

---

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 36 | 24 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 75 | 60 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 38 | 26 | 12 |
| | மொத்தம் | 151 | 111 | 40 |

## 8. தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்

### 8.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 8.1.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேந்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடாகிய ரூபா 300,000 சேமிப்புக்குள்ளாகியது.

(ஆ) ஐந்து செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக, நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 30 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 8.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் எனும் கோதாவில் 02 வருமானக் குறியீடுகளில் வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல் போன்ற பணிப்பொறுப்புகள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டுக்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.03.00 - இலாபத்திற்குரிய வருமான மதிப்பீட்டைத்

தயாரிக்கும் போது உரித்தாக்கிக் கொள்ள வேண்டிய நிறுவனங்கள் 199 ஆக இருந்த போதிலும், வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது 25 நிறுவனங்கள் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்தன. வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.04.00 - இலாபப் பங்கிற்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது உரித்தாக்கிக் கொள்ளப்பட வேண்டிய 52 கம்பனிகள் காணப்பட்ட போதிலும், வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது 40 நிறுவனங்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தன.

**8.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கற்கூற்று**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையிலிருந்து நீங்கிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 596,854 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 6 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையானவையாகவும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறிருந்தும் 2015 யூன் 30 ஆந் தகிதி வரையிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது.

**8.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 26 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 38 | 26 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 18 | - | 04 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - | - |
| | மொத்தம் | 83 | 72 | 15 | 04 |

மீளாய்வாண்டின் இறுதி அளவில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளது அடிப்படையில் அழைக்கப்பட்டு நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கடமைகளைக் கையளிப்பதற்காக முன்வராமை வெற்றிடங்கள் காணப்பட்டமைக்கான காரணமாகும்.

## 9. தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 9.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேந்கொள்ளப்படுகின்றன.

ஏழு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 88 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 9.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கு மேலதிகமாக 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட மெய்மைய்யாய்வுச் சபையின் மூலமும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வில் சிபாரிசு செய்யப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 139 பொருள் விடயங்கள் தொடர்பான தகவல்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாச் சொத்துக்களில் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.3 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பிடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**திட்டமிடல்**

---------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவை கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகின்ற மாவட்ட / பிரதேச செயலகங்களில் உள்ள பதவியணி மீளாய்வு நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 13 ஆந் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உரிய கோவைகளின் பிரகாரம் 25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் பதவியணி மீளாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய 10 மாவட்டங்களிலும் பதவியணி மீளாய்வு செய்யப்படாது மாவட்ட செயலாளர்கள் மீளாய்வு செய்யக்கூடிய வகையில் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள மாவட்டப் பதவியணி வரைவு போன்ற மாதிரி அறிக்கை ஒன்றை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவையின் பிரகாரம், பொதுத்துறை நிறுவனங்களின் தரவு முறைகளைத் தயாரிப்பதற்காக தேவையான மனித வளங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தன. தரவு முறைமைக்காக பொதுத்துறை நிறுவனங்களின் உத்தியோகத்தர் ஒருவர் சிபாரிசு செய்து உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**9.4 மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

---------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 13 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 43 | 36 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 14 | - |
| | மொத்தம் | 81 | 65 | 16 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணப்பட்ட 16 வெற்றிடங்களில் 09 வெற்றிடங்களும் சிரேஷ்ட நிலையிலுள்ள பதவிகளை உள்ளடக்கி இருந்தன.

(ஆ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி ஒன்று மிகையாக இருந்தது.

## 10. தலைப்பு 243 – அபிவிருத்தி நிதி திணைக்களம்

### 10.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேந்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,240,000 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எட்டு செலவின விடயங்களுககு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திற்கும் 44 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 10.2 செயலாற்றல்

-------------------------

2014 இன் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பெரும்பாக நிதித்துறையில் காணப்படுகின்ற சிக்கலால் அத்துறை சம்பந்தமான நிறுவனம் மற்றும் நபர்கள் பெரும்பாக நிதி அதிகாரச்சட்டம் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 2006 ஆம் ஆண்டு முதல் பெரும்பாக நிதி அதிகாரச்சட்டத்தை தாபிக்க முடியாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிலும் உத்தேச அதிகாரச்சட்டம் தொடர்பில் இலங்கை பெரும்பாக நிதிச் சங்கத்தின் மூலம் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வராமையால் இந்த அதிகாரச் சட்டத்தை தாபிக்க முடியாதிருந்தது.

(ஆ) உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் நெல் உற்பத்தி, விதைக்கப்பட்ட நிலத்தின் அளவு மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட நெல் உர அளவுடன் ஒப்பிடும் போது குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டில் எதிர்பாராதவாறு ஏற்பட்ட செலுத்திய வறட்சி அதற்குக் காரணமாயிற்று

(இ) நாடு அரிசியில் தன்னிறைவு அடைந்தது நாட்டின் நுகர்வுத் தேவைகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மிகையாக உள்ள நெல் இருப்புக்களில் 50,000 மெட்ரிக் தொன் அரிசியை உலக உணவு ஸ்தாபனத்திற்கு நன்கொடையளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த அமைப்பிற்கு வழங்கியிருந்த மொத்த அரிசியின் அளவு 3,409.2 மெட்ரிக் தொன் ஆக இருந்தது.

(ஈ) விவசாய கைத்தொழில் உற்பத்திக்கான நுகர்வோர் விலை நிர்ணயித்தலின் கீழ் நெல், சோயா அவரை, சோளம் மற்றும் கோழி உற்பத்தி போன்றவற்றின் நுகர்வோர் விலை நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கோழி இறைச்சி கிலோவொன்றிற்காக ரூபா 380 சான்றுபடுத்திய விலை மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தது.

(உ) தோட்டக் கம்பனிக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட தோட்டங்களை அண்மித்த பயிரிடப்படாத காணிகள் விவசாய கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக 12500 இளம் முயற்சியாளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அந்த 12500 முயற்சியாளர்களினதும் தொடர்புபடுத்தலை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அந்தச் செயற்பாடுகள் தோட்டக் கம்பனிகளில் ஏற்பட்ட எதிர்ப்புகளினால் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பிரதேச தோட்டக் கம்பனிகளுக்கு 6 சதவீத வட்டியுடன் கடன் வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்தது. வங்கிக்கும் தோட்டக் கம்பனி முகவர்களுக்கிடையேயும் 6 சதவீத வட்டி தொடர்பாக நடைமுறையில் இணக்கப்பாட்டிற்கு வர முடியாமையினால் அந்த உத்தேசத் திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது.

(எ) கைப்பணிக் கைத்தொழிலாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான சுழற்சி நிதியத்தை செயற்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அது தொடர்பாக ஏற்படுகின்ற நடைமுறைப் பிரச்சினைகளின் காரணமாக அந்த நிகழ்ச்சித்திட்டம் செயலிழந்து காணப்பட்டது.

(ஏ) 2014 யூலை 21 ஆந் திகதி முதல் 03 மாதங்களாக 17 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட ‘‘வறட்சியால் பாதிப்பிற்குள்ளாகிய மக்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்’’ செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டடிருக்கவில்லை. எனினும், வறட்சி நிலையின் காரணமாக நாடு முழுவதும் மக்கள் முகங்கொடுத்த குடிநீர் பற்றாக்குறை, பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் காணப்படாமையின் காரணமாக, நாளாந்த வருமான வழிகள் தடைப்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. ஏனைய பயிர்களுக்கு ஏற்படக்கூடிய பயிரச் சேதம் மற்றும் பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரப் பின்னடைவு கருதி அந்த செயற்திட்டம் செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஐ) விதை நெல் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2014 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2015 இன் பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிகவும் வறட்சியால் பாதிப்பிற்குள்ளான சகல விவசாயிகளுக்கும் 2014/15 பெரும் போகத்தில் பயிர்செய்வதற்குத் தேவையான விதை நெல்லை இலவசமாக வழங்குவதற்குத்

தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2014 நவம்பர் 05 ஆந் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரினதும் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற பிரதான மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் /அரசாங்க அதிபர்களுடன் நடைபெற்ற கூட்டத்தின் போது 2014/15 பெரும் போகத்திற்காக நெல் விதைத்தல் 2014 ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் ஆரம்பிப்பதைக் கவனத்திற் கொண்டு 2014/15 பெரும் போகத்தில் உரிய விதை நெல்லை வழங்குதல் 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**10.3 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 10 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | - | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 07 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 10 | 10 | - |
| | மொத்தம் | 31 | 27 | 04 |

**11. தலைப்பு 244 – வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்**

**11.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆறு செலவின விடயங்களுக்காக சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 69 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**11.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பற்றாக்குறைகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சொத்துக் குறியீட்டு இலக்கம் 21 இல் 2014 சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதிக்கும் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களின் அளவு தொடர்பான அறிக்கையின் பெறுமதிக்குமிடையே ரூபா 150,815 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் குறியீட்டு இலக்கம் 5008 இன் கீழ் மூன்று மோட்டார் வாகனங்களின் மொத்த கிரயம் ரூபா 11,700,000 ஆக இருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் அது ரூபா 8,400,000 ஆகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 3,300,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**11.3 செயலாற்றல்**

-----------------------------

2014 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடம் முழுவதும் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலய ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் (SAFTA) கீழ் வரிச் சலுகைப் பட்டியல் திருத்தம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கோவையின் பிரகாரம் சலுகைப்பட்டியல் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்க சுங்கத்தால் கைப்பற்றப்பட்ட 28 ரோஸ் மர கொள்கலன்கள் தொடர்பாக அரச மரக் கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி சுங்கப் பரிசோதனை முடிவடையாமையால் அகற்றும் முறை தொடர்பாக திர்மானிக்க முடியாதிருந்ததாக 2014 யூன் 03 ஆந் திகதிய கடிதம் மூலம் அந்த கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குரியதாக எடுக்கப்பட்ட எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக கோவையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சுயதொழில் வேலை வாய்ப்பாளர்களது சங்கத்தில் எழுந்த சுங்கம் பொறுப்பேற்ற பொருட்கள் தீ வைக்கப்பட்டமை தொடர்பான பிரச்சினையின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி அறிக்கையொன்று கோரப்பட்டிருந்த போதிலும், அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கோவையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 19(அ) பிரிவின் கீழ் பதிவழிக்கப்பட்ட சுங்கத் தீர்வை கூடிய விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதற்குரிய நடவடிக்கைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவையின் பிரகாரம் 2011 ஆகஸ்ட் மாதம் வரை சுங்கத் தீர்வை சலுகை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக மாத்திரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 11.4 மனிதவள முகாமைத்துவம்

---

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 09 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 04 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 20 | 18 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 09 | 04 |
| | மொத்தம் | 57 | 40 | 17 |

## 12. தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம்

---

### 12.1 கலைத்தல் முற்பணக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 0999-08 ஆம் விடய இலக்க வியாபாரப் பொருட்களை கொள்வனவு செய்யும் திணைக்களத்தின் நிர்வாகச் செலவினங்களை உள்ளடக்கிய தேயிலை, இறப்பர், தேங்காய் உற்பத்திகள் மற்றும் ஏனைய வியாபாரப் பொருட்கள் மற்றும் போமிக் மற்றும் அசிட்டிக் அமிலங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பான முற்பணச் செயற்பாடுகளை கலைக்கும் கணக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 89,879,747 திரண்ட தொழிற்படு நட்டத்தைப் பதிவழிப்பதற்காக 2013 மார்ச் 19 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் செயற்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 5,954,448 திணைக்களத்தில் சேமிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியன்று பதிவழிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு திரண்ட தொழிற்படு நட்டம் ரூபா 83,925,299 ஆக இருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 24,633,000 நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி குறித்த தொழிற்படு நட்டம் பதிவழிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 518(3) இன் பிரகாரம் இரண்டு ஆண்டுகளின் போது கணக்குகளைத் தீர்த்து மூடப்பட்டு கலைத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 18 வருடங்கள் கடந்தும் மேற்கூறப்பட்ட முற்பணக் கணக்கில் தொடர்ந்தும் காணப்படுகின்ற ரூபா 59,292,299 நட்டத்தைப் பதிவழித்து கலைத்தல் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 999/407 ஆம் விடய இலக்க விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்நாட்டு மற்றும் ஏனைய உற்பத்திகளைக் கொள்வனவு செய்து கூட்டிணைத்தல் மற்றும் விற்பனை, குளிரூட்டல் களஞ்சிய வசதிகளை வழங்கல் மற்றும் ஆரோக்கிய மண்டப வசதிகளை வழங்குவதற்கான முற்பண செயற்பாடுகளை கலைக்கும் கணக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கக் காணிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 454) 6(1) ஆம் பிரிவின் கீழ் விசேட கொடுப்பனவுப் பத்திரத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்ட சொத்துக்களை நகர அபிவிருத்தி அதிகாரசபை தமது செயற்பணிகளுக்குப் பறம்பாக ஈடுபடுத்துமாயின் மீண்டும் அந்த ஆதனங்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு கையேற்க வேண்டியிருந்த போதிலும், அந்த ஆதனங்கள் தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம், திறைசேரியின் அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 222,860,785 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 222,681,406 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 179,379 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 222,681,022 திரண்ட தொழிற்படு நட்டத்தைப் பதிவழிப்பதற்காக 2013 மார்ச் 19 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குகள் செயற்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2015 மே 21 ஆந் திகதியளவிலும் அந்த தொழிற்படு நட்டம் பதிவழிக்கப்படாதிருந்தது. நிதிப்பிரமாணம் 518(3) இன் பிரகாரம் இரண்டு வருடங்களிற்குள் கணக்குகளைத் தீர்த்து மூடப்பட்டு கலைத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டளவில் 25 வருடம் கடந்தும் கலைத்தல் நடவடிக்கைகள் 205 மே 21 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**12.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2014 ஆம் அண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**12.3 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை செயல் நடவடிக்கைத் திட்டங்களில் நிதிப் பிரமாணக் கோவைகளில் திருத்தங்களைச் செய்யும் செயற்பாடுகள் பிரதான பணியாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 17 ஆந் திகதி வரையிலும் அது வெளியிடப்படவில்லை. இதனால், அது தொடர்பான ஏனைய செயற்பாடுகளான நிதிப்பிரமாணம் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் பரீசீலனைக்காக இலகுவான விபரமான கைநூல் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிககைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்த கிரய முரண்களை சீராக்குவதற்கான மொத்தக் கிரய மதிப்பீட்டுத் திருத்த நடவடிகைகள், அதற்கான சிபாரிசுகளை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட "கிரய மதிப்பீட்டு பரிசீலனைக் குழு (CEEC)" செயற்படாமையின் காரணமாக, பின்னர் தீர்மானிக்கும் வரை 2015 யூன் 17 ஆந் திகதி வரை நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவிற்குத் தேவையான கட்டமைப்பொன்றை வடிவமைப்பதற்கு அரசாங்கத்தின் கொள்வனவுத் தந்திரோபாய வழிகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் 17 ஆந் திகதி வரையிலும் அப்பணிகள் முடிவுறவில்லை.

(ஈ) நிதி முகாமைத்துவத்தின் செயற் திறனை மேம்படுத்துவதற்காக ரூபா 100,000 வரை சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களை இலத்திரனியல் கொடுப்பனவு ஊடகம் மூலம் மேற்கொள்ளக்கூடிய வகையில் செலவினங்கள் முகவர் நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளைத் தொடர்புபடுத்தி திணைக்களத்தால் வங்கி வரவு முறைமையொன்று (Debit Card System) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக இலங்கை வங்கியினால் ரூபா 314,160 செலவில் அரசாங்க நிறுவனங்களின் கொடுப்பனவிற்காக 5000 வங்கி முற்செலுத்தல் அட்டைகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் 01 ஆந் திகதியளவிலும் அதில் 24 அட்டைகள் 16 நிறுவனங்களுக்கு மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. 2015 யூன் 01 ஆந் திகதியளவில் அதில் செயற்படு நிலையில் 02 அட்டைகள் மாத்திரமே காணப்பட்டன.

(உ) பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் பேணப்படுகின்ற நியதிச்சட்ட நிதியம், பொறுப்பு நிதியம் மற்றும் நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்களை முறைமைப்படுத்துவதற்காக திணைக்களத்தால் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் அமைச்சு/ திணைக்களங்களின் 61 நிதியங்கள் பேணப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 07 ஆந் திகதியளவில் அதில் 29 நிதியங்களின் இறுதிக் கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத நிதிக்கூற்றுகளுக்கிடையே 13 நிதிக்கூற்றுக்கள் பொருளாதார நிலையங்களுக்குரிய பொறுப்பு நிதியங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டிற்குரிய 07 நிதியங்களின் நிதிக்கூற்றுக்களும் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ‘‘நிதிப்பிரமாணம் 104 மற்றும் 113 இன் கீழ் பதிவழித்தல் மற்றும் கைவிடல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்’’ திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நட்டம் மற்றும் பதிவழித்தல் முறையே ரூபா 6,590,795,249 மற்றும் ரூபா 346,581,945 ஆக இருந்தன. அதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அறவிட முடியாதிருந்த நிலுவை வரி நட்டமே அதிக அளவில் காணப்பட்டதுடன், அது மொத்த நட்டம் மற்றும் பதிவழித்தல்களின் சதவீதமாக முறையே 90 சதவீதம் மற்றும் 60 சதவீதமாக இருந்தது. அந்த ஆண்டுகளின் நெல் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்த்து பதிவழித்தல் மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் 2013 இன் போது மொத்த பதிவழித்தல்களில் 0.34 சதவீதமான இந்தப் பெறுமதி 2014 இன் போது 32 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் 2013 ஆம் அண்டை விட 2014 ஆம் ஆண்டின் போது நெல் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட முற்பணத்தைத் தீர்த்தலின் நட்டம் ரூபா 87,825,182 இனால் அதிகரித்திருந்தது. அது முன்னைய ஆண்டினை விட 387 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், திணைக்களத்தின் நட்டம் மற்றும் பதிலழித்தல்களுக்காக அங்கீகாரம் வழங்குதல் தவிர அந்த நட்டங்களைத் தவிர்ப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு தெரியப்படுத்துதல் அல்லது அதன் பொருட்டுப் பின்பற்றப்பட வேண்டிய ஆலோசனைகள் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 12 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 30 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 14 | 03 |
| | மொத்தம் | 83 | 58 | 25 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 25 வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலைப் பதவிகள் 15 காணப்பட்டன.

(ஆ) இரண்டாம் நிலையிப் பதவியான திட்ட அமுலாக்கல் உதவியாளர்கள் பதவி, அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றாக இல்லாதிருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியில் அந்தப் பதவியின் 03 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) கொள்வனவு முகாமைத்துவ விடயங்களிலான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் விடயங்களைத் தயாரித்தல், மீளாய்வு, அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் மற்றும் அரசாங்கக் கொள்வனவு தந்திரோபாய வழிகளை அமுல்படுத்துதுல் என்பன அரசாங்க நிதித் திணைக்களத்தின் கொள்வனவுப் பிரிவின் பிரதான பணியாக இருந்த போதிலும், பதவியணியில் காணப்படுகின்ற கொள்வனவு விசேட நிபுணத்துவப் பதவி மற்றும் 04 கொள்வனவு நிறைவேற்றுதரப் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 13. தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

### 13.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எட்டுச் செலவின விடயங்களுக்கான நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 06 சதவீதத்திற்கும் 64 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 13.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவராக வருமானக் குறியீட்டிலக்கம் 13 இன் வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 20.03.99.00 ஆம் வருமானக் குறியீட்டிலக்கம் - விற்பனையும் கட்டணங்களும் (ஏனைய பெறுவனவுகள்)**

2013 ஆம் ஆண்டில் மொத்த வருமான சேகரித்தல் ரூபா 11,577,646,044 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் மொத்த வருமான சேகரித்தல் ரூபா 6,598,025,951 ஆக இருந்தது. அதன் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,979,620,093 இனால் குறைவாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, வருமானம் குறைவடைந்தமைக்குக் காரணிகளாகிய விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 30.01.01.00 ஆம் வருமானக் குறியீட்டிலக்கம் – வெளிநாட்டு மானியங்கள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகளின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 32,000,000,000 ஆக இருந்தது. அரசிறைக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி அது ரூபா 16,000,000,000 வரை குறைக்கப்பட்டிருந்தது.

திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை கவனத்தில் கொள்ளாமல் வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

**(இ) 20.06.02.00 ஆம் வருமானக் குறியீட்டிலக்கம் - மூலதனச் சொத்து விற்பனை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டின் ரூபா 322,901,388 தொகையான மொத்த வருமானச் சேகரிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 17,604,345,609 ஆக இருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டினைவிட ரூபா 17,281,444,221 இனால் அதிகரித்திருந்தது.

(ii) அரசாங்க பாதுகாப்பு அமைச்சிற்குச் சொந்தமான காணியொன்றை ஹோட்டல் அபிவிருத்திக்காக தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கியதால் கிடைத்த ரூபா 19.82 பில்லியன் மற்றும் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அந்தப் பணத்தை முதலீடு செய்ததால் பெறப்பட்ட வட்டி ரூபா 5.45 பில்லியனில் ரூபா 12.21 பில்லியன் பிறிதொரு செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டு எஞ்சிய பணம் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையும் தாமதித்து இந்த வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**(ஈ) 20.02.02.01 – வருமானக் குறியீட்டிலக்கம் - கடன் வழங்கலுக்கான வட்டி**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 773,340,000 கடன் தொகைக்குரியதாகக் கிடைக்க வேண்டிய ரூபா 612,893,552 வட்டித் தொகையிலிருந்து எந்தத் தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன், வட்டியை அறவிடுதல் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) சணச சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 11,114,479 கடன் தொகைக்குரியதாகக் கிடைக்கவேண்டிய வட்டி ரூபா 2,814,034 ஆக இருந்ததுடன் அந்த வட்டித் தொகையையும் அறவிடல் நிச்சயமற்றுக்

காணப்படுவதாக நிலுவை வருமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 111.6 மில்லியன் கடன் தொகைக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 2,567,890 நிலுவை வட்டியிலிருந்து ஒரு பகுதியையேனும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது முடியாதிருந்தது.

**(உ) 20.06.04.00 – வருமானக் குறியீட்டிலக்கம் - வருமான விபரம் - கடனை மீள அறவிடல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த முறையே ரூபா 550,990,000 மற்றும் ரூபா 222,350,000 கடனில் எதனையும் அறவிடுவதற்கு 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் திணைக்களம் தவறியிருந்தது.

(ii) 1992 ஆம் ஆண்டின் போது குறைந்த வருமானம் பெறுபவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு சணச சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 11,114,479 கடன் பணத்திலிருந்து எதனையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. உரிய கடன் பணத்தை ஒரே தடவையில் செலுத்த முடியாதெனின் தவணைமுறையில் செலுத்தும் திட்டமொன்றை முன்வைக்குமாறு உரிய நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதிலும் அதற்கு எவ்வித பதிலும் கிடைத்திருக்கவில்லை.

(iii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு 3 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 116 மில்லியன் கடனில் ரூபா 111.6 மில்லியனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் இயலாதிருந்தது.

(iv) வாழைச்சேனை மற்றும் எம்பிலிபிட்டியில் அமைந்துள்ள இரண்டு கடதாசித் தொழிற்சாலைகளின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்காக வ/ப தேசிய கடதாசிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட

ரூபா 50 மில்லியன் வட்டியற்ற கடன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய தொகை ரூபா 35 மில்லியனாக இருந்ததுடன் இந்த நிலுவைக் கடன் மீதியிலிருந்து எதனையும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(v) எட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,648,908,370 தொகையான கடன் பணத்திற்குரிய தவணைப் பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) 20.02.01.99 – வருமானக் குறியீட்டிலக்கம் - ஏனைய குத்தகை வாடகை**

---

தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்ட கட்டிடத்திற்கான வாடகை 2013 ஆம் ஆண்டிலிருந்து இழப்பிற்குள்ளானது. அந்தக் கட்டிடத்தை மீண்டும் வாடகைக்கு வழங்காமை தொடர்பாக கொழும்பு பிரதேச செயலாளர் விசாரணை செய்து காரணங்கள் சமர்ப்பிக்கப்படும் என முன்னைய ஆண்டில் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் 15 ஆந் திகதியளவிலும் உரிய பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**13.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரிப் பிரதிச் செயலாளரின் (திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம்) பொறுப்பில் உள்ள நிதி மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கம்பனிப் பங்குகளின் சான்றுபடுத்திய பட்டியல் பரிசோதனையின் போது 50 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கம்பனியின் பங்குச் சான்றிதழ் காணப்பட்டது. அச்சான்றிதழைப் பாதுகாத்தல், நிரந்தரத் தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் தற்போதைய பெறுமதியை சான்றுபடுத்தலுக்கான முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணனிமயப்படுத்தப்பட்ட பதிவேடுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு நேரொத்ததாக பங்குச் சான்றிதழ்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள், தற்போது பேணப்படுகின்ற பதிவேடுகளை நாளதுவரையாக்குதல் மற்றும் செயற்பாடற்ற

நிலையில் காணப்படுகின்ற நிறுவனங்களுக்குரிய சான்றிதழ் பத்திரம் அல்லது ஏனைய ஆவணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**13.4 செயலாற்றல்**

--------------------

2014 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்குரிய 213 கட்டு நிதிக் கணக்குகளின் கீழ் ரூபா 20,666.79 மில்லியன் தேறிய வரவு மீதி தீர்க்கப்படாது காணப்பட்டது. 2015 செப்தெம்பர் மாதமளவில் அதில் 191 கட்டு நிதிக் கணக்குகள் இணக்கஞ் செய்யப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தன. தொடர்ந்தும் தீர்க்கப்படாது காணப்படுகின்ற கட்டு நிதிக் கணக்குகளின் எண்ணிக்கை 22 ஆக இருந்ததுடன், அவற்றின் தேறிய வரவு மீதிகளின் பெறுமதி ரூபா 1,124.73 மில்லியனாக இருந்தது. அந்த மீதிகள் 01 வருடம் முதல் 17 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற மீதிகளாகும்.

(ஆ) திறைசேரிப் பிணை முறிகளில் ரூபா 916 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு அதன் கீழ் உழைக்கப்பட்ட வட்டிப் பணத்திலிருந்து மரணமடைந்த, முழுமையாக ஊனமுற்றவர்கள் மற்றும் வைத்திய காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட கடன் மீதியைத் தீர்ப்பதற்காக திணைக்களத்தால் ஆதன பிணை நிதியமொன்று உருவாக்கப்பட்டிருந்தது. நிதியத்தின் செயற்பாடுகளுக்குரிய ஏதாவது விடயங்களில் வேறுபாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த விடயங்களை உள்ளடக்கிய ஆலோசனைச் சுற்றறிக்கையொன்றை விநியோகிப்பதற்கு திணைக்களம் 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே, இந்த ஆதனப் பிணைக் கடன் நிதியத்தின் கீழ் கடன் மீதியத் தீர்க்கும் போது மரணம் ஏற்பட்டு 3 மாதங்களுக்குள் கடன் பணத்தைத் தீர்ப்பதற்கும் அதன் பிரகாரம் அட்டுறுவான வட்டியைக் கவனத்தில் கொள்ளாதிருப்பதற்கும் வங்கியுடன் பரஸ்பர இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் சில கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கு மிக நீண்ட காலம் சென்றிருந்தது,

(இ) 2006 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் நெல் மற்றும் அரிசியினைக் கொள்வனவு செய்வதற்காக களஞ்சிய வசதிகள் மற்றும் விற்பனை வலைப்பின்னலொன்றை ஏற்படுத்துவதற்காக விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் சுழற்சி நிதியமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. நெல் சந்தைப்படுத்தல் சபை, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வியாபார மற்றும் வணிகத் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக நிதியினை வழங்குதல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதி அறிக்கையின் பிரகாரம், நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட பணத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 2,813.38 மில்லியனாகும். மேலும், 2014 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 4,217.88 மில்லியனில் ரூபா 1,518.27 மில்லியன் அதாவது 36 சதவீதம் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) சிறு மற்றும் பெரும் போகங்களின் போது நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக மாவட்ட செயலகங்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,764 மில்லியன் மற்றும் ரூபா 227.46 மில்லியன் வழங்கப்பட்டிருந்தன. அதில் ஒவ்வொரு வருடத்திலும் முறையே ரூபா 62.7 மில்லியன் மற்றும் ரூபா 114.2 மில்லியன் அதாவது 4 சதவீதம் மற்றும் 50 சதவீதம் தீர்க்கப்பட்டிருந்தன.

(உ) இந்த நிதியம் அமுல்படுத்தப்படுவதன் நோக்கமான ''நெல் மற்றும் அரிசி கொள்வனவிற்கான களஞ்சிய வசதி மற்றும் விற்பனை வலைப்பின்னலொன்றை ஏற்படுத்துதல்'' என்ற நோக்கம் தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**13.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 14 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 82 | 68 | 14 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 17 | 01 |
| | மொத்தம் | 121 | 100 | 21 |

**14. தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்**

**14.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 37 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**14.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 297,799 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலத்தைக் கடந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்ட ரீதியான மற்றும் ஏனைய

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அக்கடனானது 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**14.3 வணிகரீதியற்ற முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது வணிகரீதியற்ற 02 முற்பணக் கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நானாவித முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்துவரும் ரூபா 342,644,844 முற்பண மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மாவட்ட செயலகங்களுக்குரிய தீர்க்கப்படாத முற்பண மீதியானது அந்தந்த மாவட்ட செயலகங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மீதியின் பிரகாரம் ரூபா 44,623,198 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iii) உணவுத் திணைக்களத்தினால் மாவட்ட செயலகங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,159,223,308 பெறுமதியான அரிசியை கொள்வனவு செய்யப்பட்ட விலையினை விடக் குறைந்த விலையில் விற்பனை செய்ததால் ஏற்பட்ட ரூபா 163,037,216 நட்டத்தின் ஒரு பகுதியான ரூபா 158,907,691 தொகையினைப் பதிவழிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதில் புத்தகங்களில் ரூபா 88,540,324 தொகையை மாத்திரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், எஞ்சிய ரூபா 74,496,892 தொகையான நட்டத்தைப் பதிவழிப்பதற்குத் தேவையான அங்கீகாரம் மற்றும் நிதி ஏற்பாடு என்பன கிடைத்திருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 106 இன் பிரகாரம் அமைச்சு, திணைக்களம் மற்றும் அலுவலகங்களுக்கு பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 10,096,623

தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து ரூபா 7,688,163 தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 2002 பெப்ரவரி மாதத்தின் போது பெறப்பட்ட ரூபா 2,408,460 முற்பணம் 12 வருடகாலமாக கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணம் பெறப்பட்ட விடயம் தொடர்பாக தொடர்ந்து நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(v) 2012 சனவரி 26 ஆந் திகதிய SA/ACCTS/04/7000/2011 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் மேற்கூறப்பட்ட (iv) இல் குறிப்பிடப்பட்ட கடன் மீதி அந்த நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற கட்டு நிதியில் தவணையாக அறவிட்டு நிலுவையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு கருத்துக்கள் வினவப்பட்டிருந்த போதிலும் தேவையான நடவடிக்கைகள் அதன் பிரகாரம் நிறைவேற்றப்படாமையினால் அந்த மீதி அறவிடப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**14.4 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத வருடமொன்றிற்குக் குறைந்த காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற பொறுப்புக்கள் ரூபா 269,974 ஆகும்.

**14.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 07 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 28 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 09 | 06 |
| | மொத்தம் | 69 | 45 | 24 |

## 15. தலைப்பு 251 – மதிப்பீட்டுத் திணைக்களம்

**15.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

**15.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டின் பொருட்டு 17 கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 06 இற்கு பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,134,950 ஆகும்.

**15.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேந்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) எட்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 7,742,262 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(இ) ஒதுக்கீட்டுக் கணக்கில் 07 செலவின விடயங்களுக்குரிய பொறுப்புகளின் பெறுமதி ரூபா 403,108 குறைவாகவும், 05 செலவின விடயங்களுக்குரிய பொறுப்புகளின் பெறுமதி ரூபா 2,962,630 அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**15.4 கட்டு நிதிக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு முடிவடைந்ததும் உடனபடியாக பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 163,000 கூட்டுத் தொகையான செயல் நிமித்த

உப கட்டு நிதி செயற்பாடு நிறைவு பெற்று 04 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையிலான கால வீச்சில் தீர்க்கப்பட்டிருந்தது.

## 15.5 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டிலக்கம் 20.03.02.09 என்ற வருமானக் கணக்குகள் தொடர்பாக வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப்பொறுப்புகள் என்பன கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) 20.03.02.09 ஆம் வருமானக் குறயீடு - மதிப்பீட்டு வருமானம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 70 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 110 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 157 சதவீதமாக இருந்தது. எதிர்பார்க்கப்பட்ட வருமானம் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது எதிர்பார்க்கப்படாத செயற்திட்டங்களுக்குரிய மதிப்பீட்டுக் கட்டணங்களின் அறவீட்டின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 434,544,259 கூட்டுத் தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான கால வீச்சிற்குரியதாகும். நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(iii) திணைக்களத்தால் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கட்டணங்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களுக்குப் புறம்பாக வெளி நிறுவனங்களுக்கும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கடன் அடிப்படையில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை வெளி நிறுவனங்களிலிருந்து அறவிடவேண்டிய மொத்த நிலுவை மதிப்பீட்டு வருமானம் ரூபா 42,643,503 ஆகும்.

(iv) மதிப்பீட்டுக் கட்டண வருமானத்தைக் கணிப்பீடு செய்யும் போது அதில் உள்ளடக்கப்படுகின்ற பிரயாணச் செலவினமாகிய ரூபா 63,361 தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக அந்த பிரயாணச் செலவினம் செலவினப் பேரேட்டில் மிகைக் கட்டணமாகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக, பிரயாணச் செலவினத்திற்கான 2014 ஆம் ஆண்டின் வருடாந்த நிதி ஏற்பாடு அதேயளவு பிழையாக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(v) மாதாந்த வருமான அறிக்கை பெறப்பட்டு இணக்கஞ் செய்யப்படாதிருந்தமையால் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 212,050 வருமானம் 2014 ஆம் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 434 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் நிதியுதவியின் அடிப்படையில் செயற்படுகின்ற சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் கட்டணமின்றி மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அரசாங்க நிதியுதவியின் அடிப்படையில் செயற்படுகின்ற 16 நிறுவனங்களிலிருந்து ரூபா 3,618,111 தொகை 2014 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய நிலுவை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(vii) 2014 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வருமானமாகிய ரூபா 17,365,205 வருமானப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**15.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

25101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,125,098 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) மரணமடைந்த, ஓய்வுபெற்ற, ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இணக்கக்கூற்றின் பிரகாரம் இடமாற்றலாகிச் சென்ற உத்தயோகத்தர்களிடமிருந்து 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,120 கடன் மீதி மற்றும் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 8,796 தொகையான கடன் மீதி என்பன காணப்பட்டன. இந்த மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

(ii) சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 393,389 ஆக இருந்தது. இந்த மீதி 02 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 508,467 தொகையான மீதியில் 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளையும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிட இயலாதிருந்தது.

**15.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**15.7.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**15.7.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு போதியளவான பதவயணியினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், 2014 ஆம் ஆண்டின்போது கணக்காய்வு செய்ய வேண்டியிருந்த 27 பிரதேச அலுவலகங்களில் 3 அலுவலகங்கள் மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 1998 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய IAI/98/2 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**15.7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு காலாண்டிற்கு ஒரு தடவை வீதம் 04 கணக்காய்வு குழுக் கூட்டங்களை ஆண்டின்போது நடாத்தவேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 03 குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 15.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களச் சுற்றாடலில் உள்ள காணி நிலையான சொத்துப் பதிவேட்டில் ரூபா 115,000,000 ஆகப் பதியப்பட்டிருந்த போதிலும் அது ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் (குறிப்பு இலக்கம் 01) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்திற்குரிய முறையே 0.071 ஹெக்டேயர் மற்றும் 70 பேர்ச் என்ற பெரிய அளவிலான கதிர்காமமம் மற்றும் கண்டி சுற்றுலா விடுதிகள் இரண்டும் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய கிரயம் அதில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அந்த சொத்துக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 15.9 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 128(2)(உ) | - | அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பது தொடர்பாக திணைக்களத்தால் விசேட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 128(2)(எ) | - | சகல நிறுவனங்களிலிருந்தும் வருமான அறிக்கை பெறப்பட்டு திறைசேரியின் கணக்குகளுடன் இணக்கஞ் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 427(2) | 142,798 | திறைசேரிப் புத்தகங்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளுடன் முற்பணக் கணக்கின் மீதிகள் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | - | திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 16 குழாம் வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தச் செயலாற்றல் அறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1647(உ) | - | மோட்டார் வாகனப் பொறுப்பு உத்தியோகத்தர் தனது பொறுப்பிலுள்ள வாகனங்கள் தொடர்பாக அந்தந்த வாகனத்தின் வகை மற்றும் வடிவம், பதிவு இலக்கம், தமக்கு வாகனம் கையளிக்கப்பட்ட திகதி கையேற்கப்பட்ட திகதி மற்றும் அது தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை வைத்திருக்க வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 4.2.3 ஆம் வழிகாட்டி | - | கொள்வனவு நடவடிக்கைகளுக்கான கொள்வனவுக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 8.7.1(அ) வழிகாட்டி | 10,572,000 | போதியளவான நிதி ஏற்பாடு இன்றி திணைக்களத்தின் கீழ்மாடியை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 8.9.1(ஆ) வழிகாட்டி | 10,572,000 | மேற்கூறப்பட்ட (ஆ)(ii) இல் காண்பிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்காக |

இரு தரப்பினர்களினாலும் எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை

---------------------------------------------

1998 பெப்ரவரி 21 ஆந் - திகதிய 05/98 ஆம் இலக்க சுற்றறிக்கை

2011 ஆம் ஆண்டில் பாட நெறியொன்றை ஆரம்பித்த உத்தியோகத்தரொருவர் 2014 திசெம்பர் 31 ஆந் திகதயளவிலும் உத்தேச உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

## 15.10 செயலாற்றல்

----------------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கபடுகின்றன.

### (அ) திட்டமிடல்

----------------------

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆதனவரி மதிப்பீடுகளின் ஆரம்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளை 204,459 ஆகவும் ஆதனவரி மதிப்பீடுகளின் இறுதிப் பரீட்சிப்பை 200,000 ஆகவும் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது முறையே 184,675 மற்றும் 180,548 எண்ணிக்கைகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ii) நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்குரியதாக 32,000 மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 26,290 மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன.

## 15.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) சீராக்கப்பட வேண்டிய மீதி

திணைக்களத்தால் 2014 திசெம்பர் மாதத்திற்கான இரண்டு வங்கிக் கணக்குகளுக்குரியதாகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கம் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | 03 வருடங்களுக்கு மேல் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புகள் | 44,715 | 12,075 | 278,315 | 335,105 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தபோதும், கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 212,088 | - | - | 212,088 |
| (iii) | இனங் காணப்படாத வரவு | 122,664 | 190,367 | - | 313,031 |

## 15.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4(1) ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதத்தை உச்ச அளவாக வேலை ஆரம்பிப்பு முற்பணமாகச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் திணைக்களத்தின் கீழ் மாடியை நவீன மயப்படுத்தும் ஒப்பந்தத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான

ரூபா 10,572,000 தொகைக்காக ரூபா 7,800,000, அதாவது 74 சதவீதம், 2014 திசெம்பர் 22 ஆந் திகதி முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**15.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**மனித வள அபிவிருத்தி - வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு கற்றைநெறி (RICS)**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட பாட நெறியைப் பயிலுவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர் தொடர்ந்து பாடநெறியில் பங்குபற்றப்போவதில்லை என அறிவித்திருந்ததாக அது வரையில் உத்தியோகத்தருக்காக திணைக்களத்தினால் 4,170 ஸ்டேர்லின் பவுண் செலவிடப்பட்டிருந்தது. அது அரசாங்கத்திற்கு பயனற்ற செலவினமாக அமைந்தது.

(ஆ) 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதிய பிரிவுத் தலைவர்களின் கூட்டத்தின் போது குறிப்பிடப்பட்ட பாடநெறிக்குரிய சித்தியடையாத இரண்டு பாடங்களுக்கு மாத்திரம் திணைக்களம் மீண்டும் ஒருமுறை நிதி ஏற்பாடு வழங்குகின்றமையும், இரண்டு பாடங்களுக்கு மேற்பட்ட சித்தியடையாது போயின் அந்தக் கட்டணம் உரிய உத்தியோகத்தரால் தனிப்பட்ட ரீதியில் செலவிடப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக இரண்டு பாடங்களுக்கு மேற்பட்டு சித்தியடையாத மூன்று உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட 1,735 ஸ்டேர்லின் பவுண் மீண்டும் திணைக்களம் அறவிடவேண்டியிருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 15.14 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 86 | 56 | 30 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 362 | 344 | 18 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 147 | 118 | 29 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 94 | 82 | 12 | - |
| (v) | அமைய | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 689 | 602 | 89 | 02 |

## 16. தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம்

### 16.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 16.1.1 பாதீட்டு முரண்கள்

நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 29 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**16.2 செயலாற்றல்**

---------------------

2014 இன் வருடாந்த செயல் நடடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மூலம் பிரதான அபிவிருத்தி தொனிப்பொருளின் கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான 2262 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றம் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 500 மில்லியனுக்கு மேற்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் மானிய அடிப்படையிலான நிதி மூலமான 136 செயற்திட்டங்களின் தகவல்கள் மாத்திரம் ஒன்றிணைந்த தகவல் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டு மாதாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு பிரச்சினைகள் இனங்காணப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட பிரதான செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் எதிர்கால செயற்திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல் என்பன திணைக்களத்தின் நோக்கமாக இருந்த போதிலும், அந்த நோக்கங்கள் அடையப்படாதிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஒரு செயற்திட்டமேனும் மதிப்பாய்வு செய்யப்பட்டு தகவல் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மேற்பார்வை செய்யப்பட்டுக் காலாண்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் ஒரு காலாண்டு அறிக்கையேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட முகாமைத்துவ மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு இயலளவை விரிவுபடுத்துவதற்காக ஒன்றிணைந்த அபிவிருத்தி தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு அந்த முறைமையை பராமரிப்பதற்கும் விடயப் பரப்பை விரிவுபடுத்துவதற்காகவும் ஆன உடன்படிக்கையில் ஈடுபடுதவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியனும், 2014 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியனும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டபோதும், 2014 ஆம் ஆண்டில் இறுதியளவிலும் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 16.3 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 21 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 24 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 14 | 04 |
| | மொத்தம் | 89 | 60 | 29 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டக் கண்காணிப்பிற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கு ஒன்றிணைந்த அபிவிருத்தி தகவல் முறைமை, வரிசை அமைச்சு மற்றும் – தொடர்புபடுத்தும் இணையதள தரவு முறைமை மற்றும் மதிப்பீட்டுத் தகவல் முறைமைகள் போன்ற தகவல் முறைமை போன்ற தகவல்களைப் பயன்படுத்திய போதிலும், திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப சேவைக்குரிய இரண்டு பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் இந்தச் செயற்பாடுகளை உயர் தரத்தில் பேணுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் ஏறக்குறைய 1/3 பங்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், ஒன்றிணைந்த அபிவிருத்தி தகவல் முறைமையில் தகவல்களை உள்ளடக்குவதற்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளில் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்ககாகவும் அந்தச் செயற்பாடுகளை தொடர்புபடுத்துவதற்காகவும் போதியளவான பதவியணியினர் மற்றும் செயற்திட்ட மதிப்பீட்டின் விடயம் தொடர்பான சிறந்த அனுபவம் உள்ள உத்தியோகத்தர் இன்மையினால் திணைக்களத்தின் நோக்கங்களை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

**17. தலைப்பு 296 - இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

**17.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

இரண்டு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதத்திற்கும் 39 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**17.2 வருமானக் கணக்குகள்**

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப்பொறுப்புகள் அவரிடம் கையளிக்கப்பட்டிருந்தகன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 10.01.03.00 ஆம் வருமானக் குறியீட்டிற்குரிய காசேட்டில் பெறுவனவாக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கூட்டுத் தொகை மாத்திரம் பதியப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வகைப்படுத்தப்பட்ட வருமானப் பெறுவனவுப் பேரேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**17.3 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் அனுமதிப்பத்திர விநியோகம் தொடர்பாக நிலவிய முறைமை மென்பொருளின் மூலம் மாத்திரம் 13902 அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமையும், அதற்குப் புறம்பாக முறைமையில் உள்ளடக்கப்படாத வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ளமையும் திணைக்களத்தின் காசாளரினால் பேணப்படுகின்ற வருமானப் பெறுவனவுக் காசேடு (Cash Book Manual – Shroff) பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டதுடன், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட

மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 13468 எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயலாற்றல் அறிக்கையில் அனுமதிப்பத்திர வருமானமாக திறைசேரி அச்சிடல் பிரதிகளில் குறிப்பிடப்பட்ட ரூபா 751.55 மில்லியன் வருமானம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமைக்குள் மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமையால் ரூபா 726.41 மில்லியன் வருமானம் மற்றும் முறைமைக்கு உள்ளடங்காது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மூலம் ரூபா 23.32 மில்லியன் வருமானமாக ரூபா 749.73 மில்லியன் ஒட்டுமொத்த வருமானமாக உழைக்கப்பட்டிருந்தது. இது செயலாற்றல் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக மேலும் பரிசீலித்தபோது திறைசேரி அச்சிடல் பிரதிகளில் காணப்படுகின்ற வருமானமாக ரூபா 751.55 மில்லியன் வருமானம் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 17.4 மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 06 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 68 | 62 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 19 | - |
| | மொத்தம் | 98 | 89 | 09 |

## 18. தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்.

---

### 18.1 செயலாற்றல்

---

2014 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் செயலாளருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் எதிராகத் தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை தொடர்புபடுத்துவதற்காக கிடைத்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 146 ஆகும். அந்த மொத்த வழக்கு எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் போது 21 வழக்குகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், ஆண்டின் இறுதியளவில் 125 வழக்குகளின் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திலிருந்து தொடர்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட 110 கோவைகளில் 90 இன் நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த போதிலும், 20 கோவைகளின் தொடர்புபடுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஏனைய திணைக்களங்களிலிருந்து தொடர்புபடுத்துவதற்காக கிடைத்த 07 கோவைகளில் 06 கோவைகளின் தொடர்புபடுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 01 கோவையின் தொடர்புபடுத்தல் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின் கீழ் உள்ள ஏனைய திணைக்களங்களிலிருந்து சட்ட நடவடிக்கைகளுக்காக திணைக்களத்திற்குக் கிடைத்திருந்து 05 கோவைகள் எவற்றினதும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**18.2 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 08 | 15 | - |
| (ii) | மூன்றாம் நிலை | - | - | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 06 | 03 | 03 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 07 | 03 | 04 | - |
| (v) | ஏனையவை (தற்காலிக அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 36 | 16 | 22 | 02 |

**19. தலைப்பு 324 - முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்**

**19.1 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் இயலுமையை விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் எத்தனை நடத்தப்பட வேண்டும் என செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஆ) நடாத்தப்பட்ட 03 செயலமர்வுகளிற்காக உத்தேசிக்கப்பட்ட 250 உத்தியோகத்தர்களில் 150 பேர்கள் சமூகமளித்தன் மூலம் மொத்த பங்குபற்றலின் சதவீதம் 64 ஆக இருந்ததுடன் இந்த செயலமர்வுகளை நடத்துவதற்காக செலவிடப்பட்ட வளங்களின் ஒப்பீட்டு விளைவு தொடர்பாக கணக்காய்வின்போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(இ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்பாடுகளின் மூலம் உள்ளகக் கணக்காய்வினை வலுப்படுத்தல், வழிகாட்டுதல் மற்றும் திறைசேரி கட்டளைகளை வழங்கி அதில் நேரடியாக தொடர்புபடல் என்பன முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் பணியாக இருந்தபோதிலும், சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்த வேண்டிய அளவு மற்றும் காலம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின்போது வழிகாட்டியினை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பரிசோதனையின் போது 2015 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்படடிருந்த செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான வழிகாட்டியை விநியோகிப்பதற்கு 2015 ஆம் ஆண்டு வரை 02 வருட காலம் கழிந்திருந்தது.

(உ) காலாண்டிற்கு ஒரு தடவை என ஆண்டின்போது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், நிதி, திட்டமிடல் அமைச்சிற்குரிய 16 திணைக்களங்களில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ஊ) உரிய வழிகாட்டலும் திட்டமிடலும் மேற்கொள்ளாமையின் காரணமாக ஏனைய அமைச்சுக்களிலும் 2009 யூன் 09 ஆந் திகதிய ஆம் இலக்க DMA/2009 (1) சுற்றறிக்கையின்படி முறைப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், ஒரு குழுக் கூட்டத்தையேனும் நடத்தாத 02 அமைச்சுக்களும் ஒரு முழுக் கூட்டத்தை நடாத்திய 01 அமைச்சும் இரண்டு குழுக்கூட்டங்களை நடாத்திய 05 அமைச்சுக்களும் மூன்று குழுக் கூட்டங்களை நடாத்திய 21 அமைச்சுக்களும் அரச நிறுவனங்களும் காணப்பட்டன.

**19.2 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 10 | 07 |
| (ii) | இரண்டாம் நிலை | 20 | 17 | 03 |
| (iii) | ஆரம்ப நிலை | 11 | 09 | 02 |
| | மொத்தம் | 48 | 36 | 12 |

**20. தலைப்பு 329 தகவல் தொழில்நுட்ப முகாமைத் திணைக்களம்**

**20.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 350,000 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவின விடயமொன்றிற்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 62 சதவீத அளவினைக் கொண்டிருந்தது.

## 20.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 780 | ரூபா<br>196,137 | அரசாங்கத்தின் வேலை மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றாமை |
| (ஆ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | | |
| | 3 ஆவது வழிகாட்டி | 3,177,162 | கொள்வனவுத் திட்டம் எதுவும் பின்பற்றப்படாது செய்திப் பத்திரிகை அறிவித்தல் வடிவமைக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது. |

## 20.3 செயலாற்றல்

--------------------

2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த (Integrated Treasury Management Informations System(ITMIS) செயற்திட்டத்தின் கணணி மற்றும் சேர்வர் கொள்வனவு நடவடிக்கைகள் உரிய ஆண்டின் போது நிறைவேற்றப்படாமையினால் ஒதுக்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 935,684 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 20.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 8 | 2 | 6 |
| (ii) | மூன்றாம் நிலை | 1 | 1 | 0 |
| (iii) | இரண்டாம் நிலை | 27 | 11 | 16 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 6 | 7 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 2 | 2 | - |
| | மொத்தம் | 51 | 22 | 29 |

## 21. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில்

காணப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 14 ஆந் திகதி திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 21.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 21.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**21.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 21.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**21.5 நிதிக்கூற்றுக்கள்**

-------------------------

**21.5.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

----------------------------------------------

இந்த அறிக்கையின் 21.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 21.5.2 நிதிசார் செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிசார் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 2014 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீடு | | 2014 | 2013 உள்ளவாறான |
|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வருமானம்** | | |
| 264,400.0 | வருமான வரி | 198,114.6 | 205,665.6 |
| 627,875.0 | உள்நாட்டு பொருட்களும் சேவை வரியும் | 556,002.7 | 498,526.3 |
| 275,725.0 | சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையிலான வரி | 233,808.0 | 219,451.3 |
| 1,168,000.0 | **வரி வருமானம்** | **987,925.3** | 923,643.2 |
| 163,450.0 | **வரியல்லாத வருமானமும் ஏனையவையும்** | **139,706.1** | 142,604.2 |
| 1,331,450.0 | **வருமானங்களின் மொத்தம்(அ)** | **1,127,631.4** | **1,066,247.4** |
| | **கழி: செலவினம்** | | |
| 335,118.8 | சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய சேவை நலன்கள் | 333,860.1 | 306,889.2 |
| 179,707.1 | ஏனைய பொருட்களும் சேவைகளும் | 176,808.2 | 130,477.0 |
| 474,136.6 | உதவுதொகைகள் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 412,601.4 | 351,387.7 |
| 447,211.8 | வட்டிக் கொடுப்பனவு | 446,393.0 | 464,529.4 |
| 488.1 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 383.2 | 225.6 |
| **1,436,662.3** | **மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (ஆ)** | **1,370,045.9** | **1,253,508.9** |
| **105,212.3** | **வருமானக் குறைவு** (அ) – (ஆ) | **242,414.6** | **187,261.5** |
| 671,657.5 | **அரச முதலீடுகள்** | 595,710.6 | 455,578.2 |
| **776,869.8** | **பாதீட்டுப் பற்றாக்குறை** | **838,125.2** | **642,839.7** |

| | | | |
|---|---|---|---|
| | **பாதீட்டு பற்றாக்குறைக்கான நிதியீட்டம்** | | |
| 646,008.1 | வெளிநாட்டுக் கடன் பெறுவனவு | 422,542.9 | 183,317.2 |
| (107,000.0) | வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்தல் | (106,979.2) | (94,895.9) |
| **539,008.1** | **தேறிய வெளிநாட்டு கடன் பெறுவனவு** | **315,563.7** | 88,421.3 |
| 13,400.0 | வெளிநாட்டு மானியங்கள் | 9,415.0 | 15,859.0 |
| 552,408.1 | **மொத்த வெளிநாட்டு நிதியீட்டப் பங்களிப்பு** | **324,978.7** | **104,280.3** |
| 989,233.2 | உள்நாட்டு வங்கியல்லாக் கடன் பெறுவனவு | 965,449.4 | 1,089,696.2 |
| (551,719.2) | உள்நாட்டுக் கடன் கொடுப்பனவு | (528,987.3) | (607,623.0) |
| **437,513.9** | **தேறிய உள்நாட்டு கடன் பெறுவனவு** | **436,462.1** | 482,073.2 |
| 14,750.0 | கடன் அறவீடு | 14,892.4 | 15,968.5 |
| 300.0 | மூலதனச் சொத்து விற்பனை | 17,604.3 | 280.3 |
| - | வைப்புக் கணக்குகள் மற்றும் பொறுப்புகளில் தேறிய மாற்றம் | 16,916.6 | 7,639.6 |
| - | காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் அதிகரிப்பு/ (குறைவு) | 27,271.0 | 32,597.8 |
| **1,004,972.1** | **மொத்த நிதியீட்டத்தின் கூட்டுத்தொகை** | **838,125.2** | **642,839.7** |

**21.5.3 நிதி நிலைமை**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் இறுதியில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| **நிதிச் சொத்துக்கள்** | | |
| அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் | 23,396.3 | 23,012.2 |
| அரச திணைக்களங்களுக்கான முற்பணம் | 9,679.0 | 9,229.9 |
| அங்கத்துவ கட்டணம் | 3,517.2 | 3,517.2 |
| கடன் வழங்கல் | 207,966.0 | 370,618.1 |
| அரசாங்கத்தின் வசமுள்ள வியாபாரங்களில் அரசின் பங்களிப்பு | 397,837.3 | 212,976.3 |

| | | |
|---|---|---|
| முத்திரை இருப்புக் கணக்கு | 1,244.4 | 971.0 |
| **நிதிச் சொத்துக்களின் கூட்டுத்தொகை** | **643,640.2** | **620,324.7** |
| **பொறுப்புகள்** | | |
| வங்கி மேலதிகப் பற்று | 164,347.9 | 137,076.8 |
| மத்திய வங்கி முற்பணம் | 143,898.0 | 109,271.8 |
| வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 25,835.3 | 22,586.7 |
| நானாவித நிதியம் | 1,284.8 | 1,386.5 |
| அரசின் கடன் பெறுவனவு | 6,577,431.5 | 5,996,496.3 |
| வைப்புகளும் ஏனைய பொறுப்புக்களும் | 62,723.5 | 83,410.4 |
| அரச திணைக்களங்களுடனான செயற்பாட்டுக் கணக்கு | (4,315.0) | (4,905.3) |
| நானாவிதக் கணக்குகள் | (29.5) | (380.5) |
| **மொத்தப் பொறுப்புகள்** | **6,971,176.5** | **6,344,942.9** |
| எதிர்பாரா சந்தர்ப்ப நிதியம் | 140.0 | 140.0 |
| **பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா சந்தர்ப்ப நிதியத்தின் மொத்தம்** | **6,971,316.5** | 6,345,082.9 |
| **நிதிச் சொத்துக்களை மிகைத்த மொத்தப் பொறுப்புகளும் எதிர்பாரா சந்தர்ப்ப நிதியத்தினதும் மீதிகளும்** | **6,327,676.3** | **5,724,758.2** |
| திரட்டிய நிதியம் - திரண்ட நிலுவை | 356,664.8 | 312,477.1 |
| பௌதீகச் சொத்துக்களின் மொத்த முதலீடும் திரட்டிய தேறிய வருமான நிலுவையும் | 5,971,011.5 | 5,412,281.1 |
| | **6,327,676.3** | **5,724,758.2** |
| **எதிர்பாராதவைகளும் கடப்பாடுகளும்** | **519,273.9** | **362,923.5** |

## 21.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மெற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான 08 தொழில் முயற்சிகளுக்குரிய ரூபா 323,375 மில்லியன் கூட்டுத் தொகை பொதுத் திறைசேரியினால் மூலதனத்திற்குப் பங்களிக்கப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களினால் கணக்காய்விற்கு நேரடியாக வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்களின் படி மேற்கொள்ளப்பட்ட மூலதனப் பங்களிப்பின் கூட்டுத் தொகை ரூபா 373,868 மில்லியன் ஆக இருந்தது. அதன்படி, அந்த 08

நிறுவனங்களுக்கும் உரிய ரூபா 50,493 மில்லியன் கூட்டுத் தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முதலீட்டுச் சான்றிதழ் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வுச் சபை அறிக்கையின்படி 03 நிறுவனங்களுக்குரிய முதலீட்டுப் பெறுமதி ரூபா 14,562 மில்லியன் குறைவாகவும், 13 நிறுவனங்களுக்குரிய முதலீட்டுப் பெறுமதி ரூபா 17,267 மில்லியன் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளின் கீழ் கணக்கு இலக்கம் 8343 இல் உள்ளடக்கப்பட்ட செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் மீதிகளின் கூட்டுத் தொகை, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 854-1 அறிக்கையில் காணப்படுகின்ற கடன் மீதிகளின் கூட்டுத்தொகையுடன் இணக்கஞ் செய்யப்பட்டபோது 81 கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 2,917 மில்லியன் கூடுதலாகவும் 90 கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 3,328 மில்லியன் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) தலைப்பு 206 இற்குரிய மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் டீ.ஜீ.எஸ்.ஏ 8(i), 8(ii) மற்றும் 8(iii) மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தீர்த்து வைக்கப்படாத மீண்டெழும் செலவினத்திற்கான பொறுப்புகளின் கூட்டுத் தொகை ரூபா 85,321 மில்லியன் தொகையும், மூலதனச் செலவனித்திற்காக பொறுப்புகளின் கூட்டுத் தொகை ரூபா 94,861 மில்லியனுமாக மொத்தப் பொறுப்புகளின் கூட்டுத்தொகையாகிய ரூபா 180,182 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 24,017 வாகனங்களுக்காக (21,498 மோட்டார் சைக்கிள்களை உள்ளடக்கி) பொதுத் திறைசேரி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மேற்கொண்டிருந்த மொத்தப் பொறுப்புகளின் கூட்டுத் தொகையான ரூபா 10,062 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**21.5.5 வங்கி மேலதிகப்பற்று**

-----------------------------------

2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வங்கி மேலதிகப்பற்று ரூபா 164,348 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளடக்கம் நிதிக்கூற்றுக் குறிப்பு இலக்கம் 26 இல் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற் குறிப்பிடப்பட்ட வங்கி மேலதிகப்பற்று 13 வங்கிக் கணக்குகளின் கூட்டுத் தொகையினால் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 02 வங்கிக் கணக்குகளின் வங்கி மேலதிகப்பற்று மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 201,035 ஆக இருந்தது. 11 வங்கிக் கணக்குகளில் சாதகமான மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 36,687 மில்லியன் ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் மேற் கூறப்பட்ட மீதி கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கணக்கில் (8020) உள்ளடக்கப்பட்ட 14 கணக்குகளில் 11 கணக்குகளின் வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 173,966 மில்லியனாக இருந்தது. அந்த 11 கணக்குகளில் 03 கணக்குகளின் மேலதிகப் பற்று மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 189,461 மில்லியனாக இருந்ததுடன் எஞ்சிய 08 கணக்குகளில் சாதகமான மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 15,495 மில்லியன் ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் மேலதிகப்பற்று மீதி ரூபா 173,966 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மேலதிகப்பற்று மீதி முன்னைய ஆண்டின் மேலதிகப்பற்று மீதியை விட ரூபா 16,536 மில்லியனினால் அதிகரித்திருந்தது.

(இ) திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 02 அரசாங்க வங்கிக் கணக்குகளுக்குரிய 03 மேலதிகப்பற்று மீதிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 11,866 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 1,604 மில்லியன் அதிகரிப்பாகும்.

(ஈ) தலைப்பு 307 – மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 7002/0000/00/0075/0097/000 ஆம் இலக்க கட்டு நிதிக்கணக்கில 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 53.58 மில்லியன் மீதி 18 வருடகாலமாக தீர்க்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளளிப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டுதவிக்கான திறைசேரியால் கட்டு நிதிக் கணக்கில் (7003) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்ட மீதியில்

08 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 18,401,706 கூட்டுத்தொகையான 04 வரவு மீதிகள் மற்றும் ரூபா 15,000 தொகையான செலவு மீதிகள் என்பன உள்ளடங்கியிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அந்த மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**21.5.6 பொது வைப்புக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதிய PF/FD/04/148 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின்படி தானிய உற்பத்திக்காக சுழற்சி நிதியமொன்றை தாபிப்பதற்கு 277-1-1-0-2502 ஆம் செலவின விடயத்தின் கீழ் ரூபா 300 மில்லியன் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டு 6000/0000/00/0011/0602 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வைப்பு தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின்படி நடவடிக்கை எடுக்காது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அந்த வைப்பு செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 66.3 மில்லியன் கூட்டுத் தொகையான வைப்பு மீதிகள் 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் முழுவதும் பொது வைப்புக் கணக்கில் (இலக்கம் 6003) நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. காலாவதியான அவ் வைப்புக்கள் தொடர்பாக உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் நிதிப்பிரமாணம் 571 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**21.5.7 நட்டமும் இழப்பும்**

---

மீளாய்வாண்டின் இறுதியளவில் 66 தலைப்புகளின் கீழ் நட்டங்கள் மற்றும் பதிவழித்தலாக ரூபா 383.21 மில்லியன் கூட்டுத் தொகையானது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் நட்டம் மற்றும் பதிவழிப்புகளின் பெறுமதியான ரூபா 225.62 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 157.59 மில்லியன் அதிகரிப்பாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இருபத்தாறு தலைப்புக்களுகுரிய ஒதுக்கீட்டுக் கணக்குளில் டீ.ஜீ.எஸ்.ஏ 7 படிவத்தின் மூலம் மேலும் அறவிடுவதற்குள்ள ரூபா 537.74 மில்லியன் கூட்டுத் தொகையான நட்டம் மற்றும் இழப்புகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றுள்ள 21 தலைப்புகளுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்குகளின் டீ.ஜீ.எஸ்.ஏ. 7 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்களின் பெறுமதி ரூபா 59.82 மில்லியனாகும். நிதிக்கூற்றுக்களில் 1701 செலவின விடயத்தின் கீழ் நட்டம் மற்றும் பதிவழிப்புகளின் பெறுமதி ரூபா 18.22 மில்லியனாக இருந்தது. அதன்படி, கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின்படி ஒப்பீடு செய்த போது ரூபா 41,601,723 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 21.5.8 அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் மூலதனப் பங்களிப்பு

---

மீளாய்வாண்டின் இறுதியளவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 121 தொழில் முயற்சிகளில் அரசாங்கத்தின் மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 397,837.33 மில்லியனாக இருந்தது. மீளய்வாண்டின் போது 06 நிறுவனங்களுக்குரிய ரூபா 189,719.82 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த முதலீட்டுப் பெறுமதியில் 47.7 சதவீதமாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீட்டின் பெறுமதி ரூபா 12.4 மில்லியன் தொகையான அரசாங்கத்திற்குச் சொந்தமான 06 தொழில் முயற்சிகளின் மீதிகள் உறுப்படுத்தப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அரசாங்கத்தின் மூலதனப் பங்களிப்பாக ரூபா 40.00 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 30.00 மில்லியனாக இருந்தமையால் ரூபா 10.00 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க மூலதனப் பங்களிப்புடன் 49 தொழில் முயற்சிகளின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 9,689.84 மில்லியன் பெறுமதியான பங்குகளுக்கான சான்றிதழ், வருடாந்த மெய்மையாய்விற்காக மெய்மையாய்வுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், அந்தப் பங்கு முதலீடு தொடர்பான

தகவல்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, இந்த சகல பங்கு முதலீடுகளினதும் சரியான தன்மை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 21.5.9 வெளி நாட்டுக் கடன் மற்றும் வெளி நாட்டு மானியம்

மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டு மதிப்பீட்டின் படி வெளி நாட்டுக் கடன் மற்றும் வெளி நாட்டு மானியமாக முறையே ரூபா 205,692.60 மில்லியன் மற்றும் ரூபா 32,000.00 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அது முன்னைய ஆண்டின் மீள்திருத்தம் செய்யப்பட்ட வெளி நாட்டுக் கடன் மதிப்பீட்டைவிட ரூபா 1,579.63 மில்லியன் அல்லது 0.8 சதவீதத்தினால் குறைவடைந்தும் மீள்திருத்தம் செய்யப்பட்ட வெளி நாட்டு மானியம் மதிப்பீட்டினை விட ரூபா 18,572.43 மில்லியன் அல்லது 58 சதவீதம் அதிகரித்தும் இருந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டின் வெளிநாட்டுக் கடனுக்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 646,008.1 மில்லியன் வரை ரூபா 440,315.5 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், வெளி நாட்டு மானியத்திற்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 13,400.01 மில்லியன் வரை ரூபா 18,599.99 இனால் குறைத்து மீள்திருத்தம் செய்யப்பட்டிருந்தது. விபரம் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| கடன் வகை | வருடாந்த மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | உள்ளபடியான பெறுவனவு | செலவினத்திற்கான வருடாந்த நிதி ஏற்பாடு | வருடாந்த செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வெளிநாட்டுக் கடன் | 205,692.60 | 646,008.10 | 422,542.97 | 256,791.38 | 222,578.73 | 34,212.65 |
| வெளிநாட்டு மானியம் | 32,000.00 | 13,400.01 | 9,415.03 | 13,563.31 | 8,888.29 | 4,675.02 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வெளி நாட்டுக் கடன் பெறுவனவாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 422,542.97 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வெளி நாட்டுக் கடன் நிதியீட்ட நிதி ஏற்பாடாக ரூபா 256,791.38 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, செலவின மதிப்பீட்டின் பிரகாரம் வெளி நாட்டுக் கடன் நிதியீட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 61 சதவீத வெளி நாட்டுக் கடன் கிடைத்திருந்தது.

(ஆ) வெளிநாட்டுக் கடன் நிதியீட்டத்தின் கீழ் 07 செலவின விடயங்களுக்கு ரூபா 2,948.97 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3 மில்லியன் முதல் ரூபா 600 மில்லியன் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் வெளிநாட்டு மானிய நிதியீட்டத்தின் கீழ் ரூபா 13,563.31 மில்லியன் மூலதன செலவினத்திற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 8,888.29 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 65.5 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பதினாறு தலைப்புகளின் 41 மூலதன செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,556.28 மில்லியன் நிதி ஏற்பாடு வெளி நாட்டு மானியங்களிலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் சில செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமையினால் அந்த செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 0.1 மில்லியன் முதல் ரூபா 600.0 மில்லியன் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**21.5.10 முற்பணக் கணக்கு**

2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 8 ஆவது பிரிவின்படி அந்த அதிகாரச்சட்டத்தின் மூன்றாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட முற்பண செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லை 2015 மே 31 ஆந் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் திருத்துதல் அல்லது புலனாய்வு செய்து முன்மொழிவுகளை ஏற்றுக்கொண்டபின் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட முற்பண செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(அ) ஆகக்கூடிய செலவின எல்லையினை விஞ்சுதல்**

---

பின்வரும் விடய இலக்கங்களின் கீழ் வரும் முற்பணச் செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஆகக்கூடிய செலவின எல்லையை விஞ்சி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| விடய இலக்கம் | முற்பண செயற்பாடுகள் | அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை | உள்ளபடியான செலவினம் | எல்லையினை விஞ்சுதல் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 26301 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் | 35,000,000 | 35,007,619 | 7,619 |

**(ஆ) ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்படாமை**

---

பின்வரும் விடய இலக்கங்களின் கீழ் வருகின்ற 05 முற்பண செயற்பாடுகளுக்காக பாராளுமன்றதத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை.

| விடய இலக்கம் | முற்பண செயற்பாடுகள் | ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளபடியான பெறுவனவு | எல்லையினை அடையாமை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 22401 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் | 390,000,000 | 352,302,705 | 37,697,295 |
| 25901 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் | 27,000,000 | 25,725,987 | 1,274,013 |
| 27101 | - மேற்படி - | 20,000,000 | 14,259,069 | 5,740,931 |
| 27301 | - மேற்படி - | 33,000,000 | 30,737,538 | 2,262,462 |
| 32001 | - மேற்படி - | 155,000,000 | 152,416,842 | 2,583,158 |

**21.5.11 உள்நாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உப கடன்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 24 உப கடன் உடன்படிக்கைகளது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 25,467.96 மில்லியன் கடன் மீதிகள் உரிய நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்படாமையினால் அந்தக் கடன் மீதிகளின் சரியான தன்மையை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) ஆறு உப கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 452.95 மில்லியன் கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட கடன் பெறுமதி ரூபா 438.79 மில்லியனாக இருந்தது. அதனால், அந்த 09 நிறுவனங்களுக்குரிய ரூபா 14.16 மில்லியன் கடன் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**21.6 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**21.6.1 அரசாங்க வருமானம்**

மீளாய்வாண்டிற்கான 99 வருமானக் குறியீடுகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி மொத்த வருமானம் ரூபா 1,447,071 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபா 1,331,450 மில்லியன் வரை ரூபா 115,621 மில்லியனால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தில் 8 சதவீதமாக இருந்ததுடன், உள்ளபடியான வருமானம் ரூபா 1,127,631 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்த வருமானக் குறியீடு 99 இல் 79 வருமானக் குறியீட்டின் மொத்த மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,428,981 மில்லியனாக இருந்ததுடன் திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,317,925 மில்லியனாக இருந்தது. அதன்படி, ரூபா 111,056 மில்லியன் அல்லது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தில் 0.1 சதவீதம் முதல் 1460 சதவீதம் வரையான வீச்சில் அந்த முரண்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 04 வருமானக் குறியீடுகளில் திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 325 மில்லியனாக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 873 மில்லியனாக இருந்தது. அதன்படி, திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானம் ரூபா 548 மில்லியனால் அதாவது 169 சதவீதத்தால் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின்படி வருமானம் சேகரிப்பதற்கு மதிப்பிடப்படாதிருந்த 04 வருமானக் குறியீடுகளில் இருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 29.4 மில்லியன் கூட்டுத் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இருபத்தாறு வருமானக் குறியீடுகளின் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி ரூபா 663,350 மில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்ப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 492,950 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த 26 வருமானக் குறியீடுகளின் வருமானங்களைச் சேகரிக்கும் போது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் 06 வருமானக் குறியீடுகளின் உள்ளபடியான வருமானம் ரூபா 16,386 மில்லியனாக இருந்ததுடன் அந்த 06 வருமானக் குறியீடுகளுக்குரிய முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 38,282 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம், முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தைவிட மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21,896 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அது முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 45 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஊ) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின்படி மீளாய்வாண்டின் இறுதியின் போது நிலுவை வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 8,685 மில்லியன் வருமானம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

| வருமானக் குறியீடு | விபரம் | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| 20.02.01.01 | அரசாங்க சொத்துக்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் - அரசாங்க கட்டிட வாடகை | 212.63 |
| 20.02.02.01 | - வட்டிக்கு கடன் வழங்கல் | 3,933.62 |
| 20.02.02.99 | - ஏனையவை | 0.12 |
| 20.03.02.99 | - விற்பனையும் கட்டணமும் | 2.47 |
| 20.03.99.00 | - நானாவித | 0.01 |
| 20.06.04.00 | கடனை மீள அறவிடல் | 4,536.11 |
| | மொத்தம் | 8,684.96 |

(எ) இலங்கை கடற்படையினரால் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்கிடையே மாலிமா ஹொஸ்பிடலிடி சேவை மூலம் 2013 யூலை மாதம் முதல் 2014 யூலை மாதம் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 116 மில்லியன் தொகையான வருமானம் மற்றும் வெளிநாட்டு கப்பல்களில் ஆயுதங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல், கடற் பாதுகாப்பாளர்களை பயிற்றுவித்தல் போன்ற வெளிநாட்டு நாணயமாற்று என்பவைகளில் உழைக்கப்படுகின்ற சேவைகளின் மூலம் 2013 சனவரி மாதம் முதல் 2013 திசெம்பர் மாதம் வரையான காலத்தில் ரூபா 969 மில்லியன் கூட்டுத் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானமானது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின் போதும் 2014 ஆம் ஆண்டின் போதும் அதில் எந்த வருமானமும் திரண்ட நிதியத்தால் ''செலவு'' வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, குடியரசின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் ரூபா 1,085 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 21.6.2 அரசாங்க செலவினம்

அரசாங்க நிதிக்கட்டுப்பாட்டிற்குரிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான பூரணமான கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்குரியதாகும். 2014 ஆம் ஆண்டிற்காக அரசாங்க செலவினங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடு 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 2014 ஆம்

ஆண்டிற்காக 208 தலைப்புகளின் கீழ் ரூபா 2,767 பில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு இருந்தது.

| **மூலம்** | **மூலதன நிதி ஏற்பாடு** | **மீண்டெழும் நிதி ஏற்பாடு** | **மொத்த நிதி ஏற்பாடு** |
|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் மூலம் அரசாங்க சேவை செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | 700 | 993 | 1,693 |
| நடைமுறையிலுள்ள சட்டங்களின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்ட திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கவேண்டிய நிதி ஏற்பாடு | 610 | 448 | 1,058 |
| விசேட நீதிச் சேவைக்காக மேலதிகமாக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | 12 | 4 | 16 |
| மொத்தம் | 1,322 | 1,445 | 2,767 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அறுபத்தொரு தலைப்புக்களின் கீழ் 122 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 935.91 மில்லியன் நிதி ஏற்பாடு மற்றும் 83 தலைப்புகளின் கீழ் 247 மூலதன செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,841.13 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடாக ரூபா 9,777.04 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எழுநூற்று இருபத்தொன்பது மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ரூபா 68,632.2 மில்லியன் கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 27,638.3 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 40,993.9 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு | தலைப்புகளின் எண்ணிக்கை | செலவின விடயங்களின் எண்ணிக்கை | நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 76 முதல் 99 | 60 | 111 | 7,022.8 | 1,371.6 | 5,651.2 |
| 51 முதல் 75 | 81 | 170 | 33,127.1 | 10.522.4 | 22,604.7 |
| 26 முதல் 50 | 124 | 448 | 28,482.3 | 15,744.3 | 12,738.0 |
| மொத்தம் | | 729 | 68,632.2 | 27.638.3 | 40,993.9 |

(இ) தொளாயிரத்தொன்பது மூலதன செலவின விடயங்களுக்கு ரூபா 151,342.2 மில்லியன் கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 76,358.2 மில்லியன் கூட்டுத் தொகையானது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 74,984.0 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு | தலைப்புகளின் எண்ணிக்கை | செலவின விடயங்களின் எண்ணிக்கை | ஏற்பாடு செய்யப்பட்ட தொகை | பயன்படுத்தப்பட்ட நிதியேற்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 76 முதல் 99 | 83 | 217 | 10,417.6 | 1,194.4 | 9,223.2 |
| 51 முதல் 75 | 120 | 266 | 66,237.2 | 26,091.9 | 40,145.3 |
| 26 முதல் 50 | 142 | 426 | 74,687.4 | 49,071.9 | 25,615.5 |
| மொத்தம் | | 909 | 151,342.2 | 76,358.2 | 74,984.0 |

### 21.6.3 பாதீட்டு நிலுவை

மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் படி பாதீட்டு நிலுவை ரூபா 777 பில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவை ரூபா 664 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின்

பாதீட்டு நிலுவை முன்னைய ஆண்டினை விட ரூபா 113 பில்லியனால் அதாவது 17 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின்படி உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 838 பில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 777 பில்லியனாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 61 பில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவை உள்நாட்டு உற்பத்தியில் 8.5 சதவீதமாக இருந்தது.

### 21.6.4 குடியரசின் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் குடியரசின் மொத்த பொறுப்புகள் ரூபா 6,971,176 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் குடியரசின் மொத்த பொறுப்புகளான ரூபா 6,344,943 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 626,233 மில்லியன் அதாவது 10 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பொறுப்புகள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | வேறுபாடு (குறைவு/ அதிகரிப்பு) | சதவீதமாக அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|---|
| | 2014 | 2013 | | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| வங்கி மேலதிகப் பற்று | 164,348 | 137,077 | 27,271 | 20 |
| மத்திய வங்கி முற்பணம் | 143,898 | 109,272 | 34,626 | 32 |
| வெளிநாட்டு கடன் சுழற்சி நிதியம் | 25,835 | 22,587 | 3,248 | 14 |
| நானாவித நிதியம் | 1,285 | 1,386 | (101) | 7 |
| அரசாங்க கடன் கணக்குகள் | 6,577,431 | 5,996,496 | 580,935 | 10 |
| வைப்புகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 62,723 | 83,410 | (20,687) | 25 |
| அரசாங்க திணைக்கள பொறுப்புக் கணக்கு | (4,315) | (4,905) | 590 | 12 |
| நானாவித கணக்குகள் | (29) | (380) | 351 | 92 |
| மொத்தம் | 6,971,176 | 6,344,943 | 626,233 | |